போன் நெ. 15. விலை 2 அணா REGD NO. 464[illegible]

திராவிடநாடு

மலர் 13 | 25—7—54 | இதழ் 4

கவர்னர் எழுதவேண்டிய கடிதம்

சென்னை
ராஜ்யபாலர் க்ரஹம்

[விசேஷத் தபால்]

அறிவுசால் ஐயா!

பொறுப்பற்ற முறையிலே ஒரு கட்சிக்காரர், கவர்னர் சம்பளத்தைக் குறைப்பதற்கான கிளர்ச்சி நடத்தப்போவதாகப் பேசியதை வன்மையாகக் கண்டித்துத் தாங்கள் தீட்டிய அறிவு ததும்பும் தலையங்கம் மேன்மை தங்கிய கவர்னரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. மே. த. கவர்னர் அவர்கள் தமது மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவிக்கும்படி எனக்கு அதிகாரமளித்தார் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

சட்ட நுணுக்கமும் அரசியல் மேதையும் மிகுந்த தலையங்கம் தீட்டி, பொறுப்புணர்ச்சியைத் தாங்கள் வலியுறுத்தி இருக்கக் கண்டு, மே. த. கவர்னர் இத்தகு திறமைசாலி வாழும் ராஜ்யத்துக்குக் கவர்னராக இருக்கும் பெருமை, தமக்கு அளிக்கப்பட்டதற்காகப் பெருமை கொள்கிறார்.

கவர்னரின் சம்பளத்தைக் குறைப்பது, அரசியல் சட்டப்படி இயலாத காரியம் என்பதைச் சுட்டிக் காட்டி இருப்பதும், அதற்கான செக்ஷனை விளக்கி இருப்பதும், தங்கள் மேதையைக் காட்டுகிறது. மே. த. கவர்னர் அவர்கள் தங்கள் இந்திய அரசியல் சட்ட திட்ட அறிவு கண்டு அகமகிழ்கிறார்.

இந்தி எதிர்ப்பு—இந்தி அழிப்பு—போன்ற செயல்களில் ஈடுபடுவோருக்கும், தாங்கள் இந்திய அரசியல் சட்டத்தில் இந்தி மொழிக்கு உரிமையும் பாதுகாப்பும் தரப்பட்டுள்ள பகுதியையும், குறிப்பாக, இந்தி பதினைந்து ஆண்டுக்காலத்தில் தேசிய மொழியாக்கப்பட வேண்டும் என்ற சட்ட விதி இருப்பதையும் எடுத்து விளக்கி, இந்நிலையில் இந்தி எதிர்ப்பு, அழிப்பு போன்றவைகள் எவ்வளவு பொருத்தமற்றவை என்பதை விளக்குவீர்கள் என்று மே. த. கவர்னர், எதிர்பார்க்கிறார்.

மே. த. கவர்னர் அவர்களின் மேலான குணங்களைத் தாங்கள் பாராட்டுவது கண்டு, குறிப்பாக அவர் தாமாகவே தமது சம்பளத்தில் ஒரு பகுதியைக் குறைத்துக் கொண்டதை எடுத்துக் காட்டி இருப்பது கண்டும், மே. த. கவர்னர் அவர்கள் தங்களைப் பாராட்டுவதோடு, இங்கு பதவி ஏற்க வந்தபோது கருப்புக் கொடி காட்டி வெறுப்பைத் தெரிவித்தவர்கள்கூட, தங்கள் அருமையான தலையங்கத்தால் தெளிவு பெற்று, கவர்னர்பதவியின் மேன்மையையும் புனிதத் தன்மையையும் உணருவார்கள் என்று மே. த. கவர்னர் பெரிதும் நம்புகிறார்.

மே. த. கவர்னர், தமது சம்பளத்தைத் தாமே குறைத்துக் கொண்டது குறித்துத் தாங்கள் குறிப்பிட்டிருப்பது பெருமைக்குரியதுதான் என்றபோதிலும், அதை அடிக்கடி வலியுறுத்தினால், கிளர்ச்சிக்காரர்கள், மே. த. கவர்னர், தாமாகவே மேலும் சம்பளச் செலவினத்தைக் குறைத்துக்கொள்ளட்டும் என்று வற்புறுத்தக்கூடும் என்று அஞ்சப்படுகிறது—எனவே, அதுகுறித்து அடிக்கடி எழுதா

கவர்னர் சம்பளத்தைக் குறைக்கும் கிளர்ச்சி நடத்தவேண்டும் என்று அண்ணாதுரை ஈரோடில் பேசியதைக் கண்டித்து 'விடுதலை' தீட்டியுள்ள தலையங்கம், முற்போக்குவாதிகளைத் திருப்தி செய்யாது—ஆனால், கவர்னர் மகிழ்வார்; காவடி தூக்குவோர் களிப்படைவர் என்கிறான், வீரன்!

[கவர்னர் சம்பளத்தைக் குறைக்கும் கிளர்ச்சியைக் கண்டித்துத் தலையங்கம் தீட்டிய இதழாசிரியருக்கு மே. த. கவர்னர் அவர்கள் இப்படி ஒரு கடிதம் எழுதவேண்டும் என்று 'வீரன்' கருதுகிறான்]

திருப்பது நலம் என்று மே. த. கவர்னர் அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்.

கவர்னர் சம்பளச் செலவு பெரும் சுமையாக இருக்கிறது என்று காங்கிரஸ் கட்சி வட்டாரத்திலேகூட கருத்து முளைத்துள்ள இந்தக் காலத்தில், தாங்கள் துணிவுடன், கவர்னரின் சம்பளம் அதிகமுமல்ல அனாவசியமானதுமல்ல, அதனை எதிர்ப்பது சிறுபிள்ளைத்தனம் என்று எழுதி, கவர்னர் பதவிக்கே பெரும் ஆதரவு கிடைக்குமாறு செய்திருக்கும் பெருமைக்குரிய தொண்டுக்காக மே. த. கவர்னர் அவர்கள் தமது நன்றியைக் கூறிக்கொள்கிறார்.

பொதுவாகவே, சமூக, பொருளாதார, அரசியல், மதஇயல் துறைகளிலே கிளர்ச்சிகள் நடத்துபவர்கள், தங்களைப்போல, இந்திய அரசியல் திட்டத்தைக் கருத்தில் கொண்டும், அதற்கு எந்தவகையிலும் முரண்படாமலும் நடந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தைத் தாங்கள் வலியுறுத்துவீர்கள் என்று மே. த. கவர்னர் எதிர்பார்க்கிறார்.

மதவாதிகளின் உரிமைக்கான பாதுகாப்புப் பிரிவு, இந்திய அரசியல் சட்டதிட்டத்தில் இருப்பது, பிள்ளையார் உடைப்புபோன்ற செயலில் ஈடுபடுவோரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுவது பலனளிக்கும் என்று மே. த. கவர்னர் நம்புகிறார்.

இந்திய அரசியல் சட்ட திட்டத்தில், இவ்வளவு பற்றும் பயிற்சியும் பெற்றுள்ள தாங்கள், சர்க்கார் நிர்வாகத்துறைக்கு எவ்வளவு பயன்படக்கூடும் என்பதை மே. த. கவர்னர் அவர்களால் எண்ணிப்பார்க்காமலிருக்கமுடியவில்லை.

தங்களிடம், மே. த. கவர்னர் அவர்கள் தமது மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் கூறிக்கொள்ள வாய்ப்பு விரைவில் கிடைக்கக்கூடும் என்று உறுதியாக நம்புகிறார்.

மே. த. கவர்னர் அவர்கள் சட்டதிட்ட நிபுணர் குழுவிற்கு அளிக்க இருக்கும் தோட்டக் கச்சேரிக்கு (குமாரி விமலாவின் குறத்தி நடனத்துடன்) தங்களுக்கு அழைப்பு அனுப்பும்படி என்னைப் பணித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்ள மகிழ்கிறேன்.

மே. த. கவர்னர் அவர்களின்
உத்தரவின்படி
அந்தரங்கக் காரியதரிசி.

✲ பெரும் சம்பளச் செலவுபற்றிக் கண்டிக்கும் 'சிறுவர்கள்' கவர்னரின் பணி எவ்வளவு முக்கியமானது, இலாக்கியமானது, அருமையானது, நாட்டுக்குத் தேவையானது என்பதை அறிந்துகொள்ளும்வகையில், மே. த. கவர்னரின் சொற்பொழிவுகளைத் தாங்கள் அடிக்கடி வெளியிட்டு, நாட்டுக்கு நற்பணிபுரிவீர்கள் என்று மே. த. கவர்னர் அவர்கள் எதிர்பார்க்கிறார்.

அ. கா.

★

வரவேற்கிறோம்

ஆந்திர ராஜிய துணை முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி அவர்கள், திருப்பதியில் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், ஆந்திர, தமிழ் ராஜ்யங்களிடையே நல்லுறவு நிலவ வேண்டும் என்பதை வரவேற்றிருக்கிறார். இரு ராஜ்யங்களுக்கும் இடையே உள்ள எல்லைப் பிரச்னையைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்திருப்பதுடன், இது சம்பந்தமாக முதலமைச்சர் காமராஜர் ஆந்திர சர்க்காருடன் கலந்து பேசுவது பயன் அளிக்கும் என்றும் கூறியிருக்கிறார். இந்தப் பேச்சை வரவேற்கிறோம். பொதட்டூர் பேட்டையில் நடைபெற்ற சித்தூர் மாவட்ட தி. மு. க. மாநாட்டில் எல்லைப் பிரச்னை குறித்து, காமராஜரும்பிரகாசமும் சந்தித்துப் பேச வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பது நண்பர்களுக்கு நினைவிருக்கும்.

❀

விடுதலைப் போர்

போர்ச்சுகல் ஏதேச்சாதிகாரத்தின் பிடியில் உள்ள கோவாவை மீட்பதற்கான விடுதலைப் போர் துவக்குவதென்று, இதற்கென அமைக்கப்பட்டுள்ள விடுதலைக் கமிட்டி தீர்மானித்துவிட்டது. விடுதலைப் படை, பம்பாயிலிருந்து ஆகஸ்ட் 15ல் கிளம்பிக் கோவா சென்று அறப்போர் நடத்தும்.

மறைந்த ஆசிரியர் உடையார் பளையம் வேலாயுதம் அவர்களின் புதல்வி
மங்கையர்க்கரசிக்கும், இராமச்சந்திரனுக்கும்
13—6—54-ல் வாழ்க்கை ஒப்பந்தம் சிறப்புற நடைபெற்றது.

திருவள்ளுவர் திருநாள்!

[க. அன்பழகன் M. A.]

தமிழ் இனத்தவரின் தனிப்பெரும் வழிகாட்டியும், தன்னிகரற்ற பெரும் புலவருமான திருவள்ளுவப் பெருந்தகையின் சீரிய கொள்கைகளும் சிறந்த கருத்துக்களுமே, சீரழிந்து கிடக்கும் தமிழ்ச் சமூகத்தைத் தலை நிமிர்ந்து வாழச் செய்யவல்ல மாமருந்து என்பதை அறிவுடையோர் அனைவரும் ஒப்புகின்றனர். அத்தகு பெருநெறி பரவ நமது முயற்சி என்ன?

"வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள், உள்ளுவரோ, மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி" என்றார் 'மனோன்மணியம்' வழங்கிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள். சாதி தொலைய, சமயப்பகை ஒழிய, கொள்கை உயர, அன்பு தழைக்க, அறம் ஓங்க, பண்பு வளர — திருக்குறள் நீர், மக்கள் உள்ளங்களிலெல்லாம் பாய்ச்சப்பட்டாகவேண்டும்.

"வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு"—நம் நாடு. புகழ்கொண்டால் மட்டும் போதுமா? அதுவும் பழம் புகழானால் பயன் குறையத்தானே செய்யும்? எனவே பழம் புகழ், புது வாழ்வு அளிக்கும்படி செய்ய வள்ளுவர் வகுத்த வழி நடக்க வேண்டும். நாட்டு மக்களையும், ஊக்கத்தோடு அவ்வழி நடக்கச் செய்ய வேண்டும்.

அதற்கான முயற்சியே "திருவள்ளுவர் திருநாள்', கொண்டாடுதலாகும்.

திருவள்ளுவர் திருநாளையோ பல்வேறு குழுவினர் வெவ்வேறு நாட்களில் கொண்டாடி வருகின்றனர். சமயச் சார்புடையார் சிலர் வள்ளுவர் தோற்றம் மாசி உத்தரம் எனவும், வள்ளுவர் மறைவு வைகாசி அனுடம் எனவும் கொண்டு அவற்றுள் ஒன்றைக் கொண்டாடி வருகின்றனர்.

பேரறிஞர் மறைமலையடிகளார் கிருத்துவின் காலத்திற்கு முப்பது ஆண்டுகள் முந்தியவர் திருவள்ளுவர் என்று அறிவித்த கருத்தைத் தழுவி வள்ளுவர் ஆண்டைக் கணக்கிட, தைத்திங்கள் துவக்கத்தையே வள்ளுவர் ஆண்டுத் துவக்கமாகவும் மேற்கொண்டு பொங்கலோடு இணைத்தே வள்ளுவர் நாளையும் கொண்டாடுவாராயினர். மற்றும்பலர் வாய்ப்பு நேர்ந்தபொழுது விழாநடத்துவாராயினர். நேர்ந்தோருவாய்ப்பற்றோரும் கடமையைக் கைவிட்டனர்.

இந்நிலையில் அனைவருக்கும் ஏற்புடையதான ஒருநாளை விழா நாளாகக் கொள்வோமானால் அந்நாள், நமது தாயகத்தின் தனிப் பெருந்திருநாளாக மலரும் என்பது திண்ணம்.

திருவள்ளுவரின் காலமே இன்னும் உறுதி எய்தவில்லை. தமிழ்ப் பேராசிரியருள்ளும், அவரது காலம் குறித்துக் கருத்து வேறுபாடுகள் உள்ளன என்றாலும் மறைமலையடிகளாரின் கருத்தின்படி வள்ளுவர் ஆண்டுக்கணக்கை மேற்கொள்வதே செயற்பாலதாகும்.

மேலும் வடவரின் ஆண்டுக்கணக்கை (பிரபவ, விபவவாதிப் பெயர் வரிசை) ஏற்று 60–ஆண்டு சுழலில்சிக்கி, காலக்கணக்கை அறுதியிட்டுக் காணமுடியாது. அல்லற்பட்டுவரும் தமிழர் தமது பழம் பெருமைக்கு ஏற்பவேனும் தனியானதொரு ஆண்டுக்கணக்கை மேற்கொள்வது இன்றியமையாததாகும். மதத்தலைவர், பேரரசர்பெயர்களால், பல்வேறு ஆண்டுக்கணக்குகள் நிலவுவதை அறிவோம் நாம். நமக்கென்று ஒரு காலக்கணக்கு இல்லாமலிருந்திருக்க முடியாது. எனினும் அவ்வாறே இழந்துள்ளோம். குருடனைப் போன்று, இடர்ப்படுகின்றோம். இழந்ததை மீட்க நமது வழிகாட்டியான வள்ளுவரின் காலத்தினை ஒட்டி ஆண்டுக் கணக்கிடுவதே வழியாகும்.

ஆனால் வள்ளுவரின் தோற்ற நாளோ, மறைவு நாளோ, உறுதி செய்ய இயலாதனவாம். அந்நாட்களை, மாசி உத்தரமும், வைகாசி அனுடமும் என்று கூறுவது—மத நம்பிக்கையுடையார்க்கே ஏற்புடையதாகும். மேலும், அவற்றுள் எதுவும் இன்று பெரும் வழக்காகவும் இடம் பெற்றிருக்கவில்லை. அருகி வழங்கும் நிலையிலுள்ளதை மத நம்பிக்கைத் துணைகொண்டு வலியுறுத்துவதும் இக்காலத்தில் பயன் விளைவிக்காது.

மற்றும் மாசி உத்தரம், மார்ச்சு மாதத்திலும்; வைகாசி அனுடம் மே மாதத்திலும் வருவதால், இவ்விழாவைக்கொண்டாடுவதிலிருந்த ஊக்கமும், உற்சாகமும் காட்டக்கூடிய கல்லூரி, உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், மார்ச்சு மாத இறுதியில் தேர்வு நிகழ்வதாலும், மே மாதம் விடுமுறை காலமாவதாலும், இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாட இயலாதவர்களாகிறார்கள்.

தைத் திருநாளையே—வள்ளுவர் நாளாகவும் கொள்ளலாம் என்றாலோ, தைப் பொங்கலோடு முன்னும் பின்னும், அதைஒட்டியவிழாக்கள் நிகழ்வதால், அவ்விழா ஒவ்வொரு குடும்பத்திலும், தனித்தனி கொண்டாடப்படுவதுமாக அமைவதும் பொதுமக்களைத் திரட்டி, அறிவுரைகள் வழங்கத்தக்க ஒரு பெருவிழாவிற்கு ஏற்ற சூழ் நிலையாக அமையவில்லை. மேலும் பொங்கலுடன் ஆண்டுத்துவக்கம் நிகழ்வதால் முத்தமிழ்விழா, "தமிழர் திருநாள்" முதலான விழாக்களும் அத்துடன் இணைத்துக் கொண்டாடப்படுகின்றன. அவற்றுடன் வள்ளுவர் விழாவையும் இணைப்பது, அதை முழுப் பொலிவுடன் கொண்டாடவோ, பயன் மிகும்படி நடத்தவோ பயனளிக்காது.

தமிழ்மக்களோ, பல்வேறுபொருளற்ற பண்டிகைகளிலே ஈடுபட்டிருந்த நிலையிலிருந்தும் இப்பொழுது தான் விடுபட்டுவருகின்றனர். அவர்களது உள்ளம் களிக்கும்படி, உவ

கைக்கு வழி செய்வதாகப் பொங்கல் ஒன்றுதான் திருநாளாக உள்ளது. மற்றொரு திருநாள் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற அடிப்படையில் மக்களை இணைந்து நிற்கத்தூண்டும் 'விழா'வாக அமையுமானால். அது வரவேற்கப்படவேண்டியதாகும். திருவள்ளுவர் திருநாள்—பொங்கல் நாளைப்போலவே—தமிழர் தேசியத் திருநாளாக—மக்கள் விழா நாளாக அமையும் தகுதி சான்றதாகும்.

எனவே — தைத்திருநாள் நிகழ்ந்து ஆறு திங்கட்கெல்லாம்—ஆண்டுத் துவக்கத்தில் ஒன்று, ஆண்டு நடுவில் மற்றொன்று என்ற முறையில் — திருவள்ளுவர் திருநாள் கொண்டாடுவது மிகவும் பொருத்தமாகும். அதன்படியே—ஆடிப் பதினெட்டாம் நாளை ஒட்டி, ஜுலை இறுதி வாரத்தில்—ஒரு நாளை வள்ளுவர் நாளாகக் கொண்டாட வேண்டுமென்று குறள் நெறிக் கழகத்தில் முன்னரே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அண்மையில் (11—7—54-அன்று) அண்ணாமலை நகரில் கூடிய சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டிலும், ஜுலை இறுதி வாரத்தில் ஒரு நாளைச் சென்னை அரசியலார், திருவள்ளுவர் திருநாளாகக் குறித்து பொது விடுமுறை அளிக்கவேண்டுமென்று ஒரு மனதாகத் தீர்மானிக்கப்பட்டிருப்பது, வள்ளுவர் வாரத்திற்கு—ஆதரவு அளிப்பதாகும். இதனைத் தமிழ் மக்கள் ஏற்று செயல்புரிவது கடமையாகும்.

தமிழகம் வள்ளுவர் நாளைத் திருவள்ளுவர் கிழமையாகவே (ஒரு வாரம்) கொண்டாடலாம் என்றெண்ணியே ஆடி 10-முதல் 16-முடிய (25—7—54-முதல் 31-வரை) ஏழு நாட்களையும் — வள்ளுவர் வாரம் என்று குறித்துள்ளோம். விழாவினை விரிவாக நடத்த விழைவாரும், அந்நாட்களிலே இயலாதாரும் அதன் பின் மூன்று நாட்களிலும் விழா நடத்தலாம். பேரூர்களில், அதன் பல பகுதிகளிலும், பல நாட்கள்தொடர்ந்தும் சிற்றூர்களில்ஓரிரு நாட்களிலும் விழா கொண்டாடலாம்.

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும், தமிழக் கழகங்களிலும் கலை மன்றங்களிலும், கட்சி அமைப்புக்களாலும் பொது நிலையங்களாலும், திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட வேண்டும்.

மீசை அரும்பும் இளைஞர் முதல், நரை மேலிட்ட முதியர்வரை, ஆடவரும், பெண்டிரும், ஆசிரியரும் மாணவரும், வணிகரும் தொழிலாளரும் பல்வேறு நிலையினரும், நான்கு பேர் ஒன்று கூடும் அவை எதுவாயினும், பட்டி மன்றம்முதல், பாராளும் மன்றம் வரை, உடற் பயிற்சிக் கூடம்முதல் ஊராட்சி மன்றம் வரை, இசையரங்காயினும், நாடகப் பேரவையாயினும் ஒவ்வோரிடத்திலும்—வள்ளுவர் விழா நிகழ வேண்டும்.

குடிசையிலும், மாளிகையிலும், திண்ணையிலும், தெருவிலும், பட்டி தொட்டிகளிலும், நாடு நகரங்களிலும் வள்ளுவர்விழா பொங்கலைப் போன்று — பொங்கிப் பூரிக்க வேண்டும்.

கொடியுயர்த்தல், தோரணங் கட்டல், அலங்கரித்தல் புத்தாடை உடுத்தல், ஊர்வலம் வருதல் விழாக் கூட்டம் நடத்தல் முதலிய பலவும் விழா நாளில் மேற்கொள்ள வேண்டும்.

குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்தல், ஏழைகளின் பசி களைதல், உழவருக்குத் தொண்டாற்றல் முதலிய சமூகப் பணிகளும் விரும்பத்தக்கன.

உலகோர் உயர்வதற்கான நல் வாழ்வின் அடிப்படையான குறள் நெறியை, அறமுறையை, அன்பு வழியை, அருட் சிறப்பை, இன்பத்தின் இலக்கணத்தை, ஒழுக்கத்தின் உயர்வை, வாய்மையின் பெருமையை, அறிவின் நலத்தை—நாட்டோருக்கு எடுத்துரைத்தற்குரிய நன்னாளே அந்நாள்! மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும், கலைஆர்வமும், கடமை உணர்ச்சியும், விடுதலை வேட்கையும், சமத்துவ இலட்சியமும், பூத்திடச் செய்வதற்கான பொன்னாளே அந்நாள்!

திருவள்ளுவரின் கருத்துக்கள் கைவிடப்பட்ட காரணத்தை, குறள் நெறி குலைய நேர்ந்ததை விளக்குவதோடு, திருக்குறள் ஆட்சியை நிலை நாட்டத் துணையாம் திருநாளே அந்நாள். திருக்குறளைப் பரப்பும் திருப்பணியை, வகுப்புகள் நடத்தும் முயற்சியை, இந்நாளில் ஊக்குவித்திடுவதும் பெரும் பயனாகும்.

விழாவினை மேற்கொள்பவர், ஆண்டுதோறும் விழா எடுக்கவும் உறுதிகொள்ளவேண்டும்.

விழாவில், வள்ளுவர் வாரத்தில் ஒரு நாளை விடுமுறையாக அளிக்க வேண்டுமெனவும், நீதி மன்றங்களிலும், சட்டசபைகளிலும், திருக்குறள் ஏட்டைக் கையிற்கொண்டு உறுதிமொழி எடுத்துக் கொள்வதே முறைஎன்றுசட்டம் இயற்றவேண்டுமெனவும், அரசியலாரை வற்புறுத்தியும், செய்தித்தாள்களும் கிழமை ஏடுகளும். பொதுமக்களும், வள்ளுவர் ஆண்டுக்கணக்கையே, வழக்காற்றில் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டும், தீர்மானங்கள் நிறைவேற்றப்படவேண்டும்.

விழா நிகழ்ச்சி விவரங்களை—இயன்றவரை—எல்லா ஏடுகளுக்கும், அவற்றிற்கு ஏற்ற அளவிலும், முறையிலும், அனுப்பவும் வேண்டும்.

பொங்கல் விழாவை ஒத்ததாக வள்ளுவர் நாள் நாடெங்கும்கொண்டாடப்படும் நிலையினை விரைவில் தோற்றுவிக்க வேண்டுகின்றோம்!

மறுமலர்ச்சி உள்ளங்கொண்ட அனைவரும் வள்ளுவர் வழிவந்த எல்லோரும் கடமையாற்ற வேண்டுகிறோம். வள்ளுவர் வாரம், திருவள்ளுவர் திருநாள் ஜுலை 25 முதல் 31 வரை. ஒல்லும் வகையெல்லாம் விழாவினைப் போற்ற வேண்டுகிறோம்!

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க—செய்யாமையானும் கெடும்" — என்பது வள்ளுவர் வாய்மொழி. வாய்மொழியை மறவாதீர்! செயலாற்றத் தவறாதீர்!

வளர்க வள்ளுவர் புகழ்!

வேல்க குறள் நெறி!!

★

[நாட்டில் நடப்பது]

ஒருவன் தான் பிடிபட்டான்!

[பரதன்]

அவன் ஒரு கொலைகாரன்!

பெற்றெடுத்த தாயையே கொலை செய்தான்!

அவன் ஓர் இளைஞன்!

இரக்கமற்று, தன் அன்னையைக் கொலை செய்திருக்கிறான்!

ஆயுட் தண்டனை தரப்பட்டிருக்கிறது, எனினும் ஐயோ! பாவம் என்றும் தண்டனை அளித்தோர் பச்சாதாபப்பட்டுள்ளனர்.

சர்க்கார் விரும்பினால், தண்டனையைக் குறைக்கலாம் என்றும் நீதிபதிகள் எடுத்துரைத்துள்ளனர்.

பத்து மாதம் சுமந்து பெற்று, பாலூட்டிச் சீராட்டி, உச்சிமோந்து முத்தமிட்டு, மழலைகேட்டுமகிழ்ந்து—குறு நடைகண்டுகளித்து, அவன் நோய் தீரத் தான் மருந்துண்டு, அம்புலி காட்டி மகிழ வைத்து, ஆசைமகனே! ஆருயிரே! இன்பப் பெருக்கே! இன்னுயிரே! என் செல்வமே! என் குலக் கொழுந்தே! என்றெல்லாம் கொஞ்சிக் குதூகலித்த, தாயை, மகன் கொலை செய்திருக்கிறான். காதகன்! பாதகன்! பழி பாவத்துக்கு அஞ்சாதவன்! மிருகம்! என்று எவரும் கண்டிப்பர், காரித்துப்புவர்—அவன் கொலைகாரன், சொந்தத்தாயைக் கொன்றுவிட்டான்! வெறியனா? இல்லை, இல்லை! தெளிவாகவே இருக்கிறான்!

காவாலியோ? அதுவுமில்லை! எனினும் கொலை செய்திருக்கிறான்.

குடி போதையோ? கூத்தி ஊட்டிய மோகமோ? களவாடிய தன் விளைவோ? இல்லை, இல்லை! அவன் இந்தக் கொலை மட்டும் தான் செய்திருக்கிறான்!

கெட்டவர்களுடன் கூடி அலைந்து, நெட்டை மரம் போல் வளர்ந்து கலைக்குதவாதவனாகி, கண்டபடி சுற்றிவந்து, குடும்பச் சொத்தைப் பாழாக்கி, தாயின் மனதைப் புண்ணாக்கி, அடித்து உதைத்து அவமானப்படுத்தி, அடுக்களையில் ஒளித்துவைத்திருந்த சிறுதொகையையும் உருட்டி மிரட்டிப் பெற்று உலுத்தனாக வாழ்ந்து, கடைசியில், நள்ளிரவில் தாயின் காதோலையைக் கழற்ற வந்து, காகூவெனத் தாய் கூவிட, அரிவாள் கொண்டு அவளை வெட்டினானோ அந்த அக்ரமக்காரன், என்று கேட்பீர்கள். இல்லை! இல்லை! தாயிடம் பாசம் காட்டி, குடும்பத்தில் பொறுப்புகாட்டி, நடந்துவந்தவன், இந்தக் கொலைகாரன்! தாயிடம்கூறிவிட்டே, கொலைசெய்தான், சம்மதம் பெற்றான், சாகடிப்பதற்கு முன்பு!!

குடும்பத்துக்கு இழுக்கு உண்டாகும் வகையில், தாய் தவறியவளாகிவிட, அது கண்டு கொதித்து எழுந்து, சொடுவாள் எடுத்து அந்தக் கொலை செய்தானோ? அதுவுமில்லை! அம்மா! உன்னைக் கொல்லத் தீர்மானித்துவிட்டேன், என்று அவன் கூறினான், செய்யடா, மகனே! என்று தாய் கூறிட, கொலையும் நடந்தது. பித்தர் விடுதியிலல்ல, நாம்வாழும்தமிழகத்தில்நடைபெற்ற சம்பவம். பேயாட்சியிலே அல்ல—சுயராஜ்ய ஆட்சிக்காலத்தில்-சென்ற ஆண்டு—ஜுலைத்திங்களில்—கோவை மாவட்டத்தில்.

தாயைக் கொன்றான் அந்த இளைஞன். வயது பதினேழாம்! அரும்பு மீசை! தாய் அவனைக்கண்டு எவ்வளவு மகிழ்ந்தாளோ, பாபம்! மகன் சிறுவனல்ல, இளைஞனாகிவிட்டான், இனி அவன், குடும்ப பாரத்தைத் தாங்கிக் கொள்வான். குடும்பம் தழைக்கும்—பேரனோ பேத்தியோ பூத்திடும், அந்த அரும்புதரும் ஆனந்தத்தைச் சுவைத்து அந்தியப் பொழுதை இன்பமாகக் கழிக்கலாம் என்று அந்தத் தாய், என்னென்ன எண்ணினாளோ, யார் கண்டார்கள்! எப்படி அந்த எண்ணம் வராதிருக்க முடியும்! மகனுக்கு வயதுபதினேழு இனிநமக்கு என்ன குறை! மகன் வாலிபன்! இனி, நமது குடும்பத்தின் பொறுப்பை அவன் ஏற்பான்! வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி, ஆயிரம் பாடுபட்டு, அருமை மகனை இவ்வளவு பெரியவனாக்கிவிட்டோம்—இனி அவன் நமக்கு ஓய்வும் வாழ்வும் பெற்றுத்தருவான், என்று எண்ணாமலிருக்கமுடியுமா? அந்தத் தாயைத்தான், வெறியால் அல்ல, கோபத்தால் அல்ல, தாங்கமுடியாத சோகத்தால், கொலை செய்திருக்கிறான், அந்த இளைஞன்! தாயிடம் பாசமற்ற பாவி அல்ல அவன்—தன் காத்தாலேயே, கருவில் வைத்துக் காத்த அன்னையைக் கொலை செய்யும் அளவுக்கு அவனைக்கொண்டு சென்றது அந்தப்பாசம்.

"உனக்கென்னடி அம்மா! சிங்கக் குட்டி இருக்கிறான்! உனக்கு ஒரு குறையும் இனி இராது—அவன், கல் உடைத்தாவது, கட்டை வெட்டியாவது, உன்னைக் காப்பாற்றாமல் போவானா!"—என்று பலர், பேசக் கேட்டுப் பூரித்திருக்கிறாள், அந்த அம்மை!

"எனக்கு இனி என்னகுறை! கோடி கோடியாகப் பணம்வைத்திருப்பவனெல்லாம், ஒரு குழந்தையில்லாமல், காசிக்கும் ராமேஸ்வரத்துக்கும் யாத்திரை போகிறான், எனக்கோ, கடவுள் அருளாலே கருவேப்பிலைக் கொழுந்துபோல ஒருமகன் இருக்கிறான், அவன்தான் என் செல்வம்! அதைவிட வேறு செல்வமும்உண்டா! மகனே! என்று நான் அழைக்கும்போது, அம்மா! என்று அவன் பதில் கூறுவது, கேட்கக் கேட்கத் தெவிட்டாதகீதமாக அல்லவா இருக்கிறது!—என்று நினைத்து நினைத்து, மகிழாதிருப்பாளா அத்தாய்! ஆனால், மகனே, அவளைக் கொலை செய்கிறான்! பதறப்பதற அல்ல! பதுங்கி இருந்தல்ல! படுத்துறங்கும் வேளையில். அல்ல! சம்மதம் பெற்றுக் கொலை செய்கிறான்! கொலைசெய்யவரும் அதே கரம், கஞ்சிக் கலயத்தைத் தூக்கி இருக்கிறது, கட்டிப்பிடித்துக் களிப்

பளித்திருக்கிறது — அதே கரம், கொலைவாளாகிறது!

"அவனும் அவளும் ஆடிப்பாடி மகிழ்கிறார்கள்!" என்ற காட்சிகாணலாம் என்று கனவுகண்ட மூதாட்டி மகன், மருமகளை அழைத்துக் கொண்டல்ல, கொலைசெய்யவருகிற காட்சியைத்தான் காண்கிறாள்.

உலகிலே, எங்கு இதுபோல நடைபெற்றிருக்க முடியும்—பெற்றெடுத்த தாயை, அன்பு மறவா மகன் கொலை செய்யும் கோரம்! கற்பனை செய்யக்கூட, கயவர்க்கன்றி பிறர்க்கு மனம் இடம்தராது! எனினும். நாச்சிமுத்து தன் சொந்தத் தாயாரைக் கொலை செய்தான்—குற்றத்தை ஒப்புக் கொண்டுமிருக்கிறான்!!

*

கோவைமாவட்டம், நாகம்மநாயக்கன்பாளையம் என்ற சிற்றூரில், பதினேழாண்டுள்ள நாச்சிமுத்து தன் தாய் வீரம்மாளை, கூநவாக்கத்தியால் அறுத்து கொலைசெய்தான்—1953ம் ஆண்டு, ஜூலை மாதம் ஆறும் நாள். வழக்கு நடைபெற்று செஷன்ஸ் ஜட்ஜி அவனுக்கு ஆயுள்தண்டனை அளித்தார், இது பத்திரிக்கையில் வெளிவந்துள்ள செய்தி.

*

வழக்கு அப்பீலுக்கு வந்தது, சென்னை உயர் நீதி மன்றத்துக்கு. நீதிபதிகள் மாக்கும், கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் வழக்கை விசாரித்தனர், குற்றம் நடைபெற்றிருப்பது உண்மை, எனவே தண்டனை தரப்பட்டது சரியே, என்று நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர். பல கொலை வழக்குகள் போல இதுவும் ஒன்று அல்ல, என்பது இந்த அப்பீலின்போது விளக்கமாயிற்று.

*

ஏழைக்குடும்பம்! தாயும் மகனும் எப்படியோகாலந்தள்ளிவந்தார்கள். உழைக்க உடலிலே வலிவு இருக்கிறது, இன்ன வேலைதான் செய்து பிழைக்கவேண்டும் என்ற போலி கௌரவமோ, குலப்பெருமையோ கிடையாது. இந்தச் சோகக் கொலை நடப்பதற்குச் சில காலத்துக்கு முன்பு, நாச்சிமுத்து ஒரு காப்பிக் கடையில் வேலை செய்து வந்தான். குடும்பத்தைப் பசியும் பட்டினியும் கொட்டாமலிருக்க, அந்த வேலை போதும். அவன் பணம் படைத்தவனல்ல, வியாபாரம் நடத்தி, இலாபக் கணக்குப்பார்க்க! வயிற்றுக்குச் சோறு—அது கிடைக்க ஏதோ ஓர் பிழைப்பு—அதுபோதும் என்று எண்ணித் தீரவேண்டிய ஏழை! பண்ணைச் சொந்தக்காரனா, எந்த உரம் சோளப் பயிருக்கு நல்லது, எத்தகைய மண்வளம் பருத்திக்கு ஏற்றது, என்று ஆராய்ச்சி நடத்த! என்ன வேலை செய்தால், பட்டினியின்றி இருக்கலாம் என்பதன்றி வேறு எண்ணவேண்டியதில்லை பெறாத, ஏழை! கோவையில் கோமான்கள் உண்டு, சிங்காரச் சீமான்கள் உண்டு, பெரும் பெரும் பண்ணையார்கள் உண்டு, நாடுஅறிந்த பெரும்புள்ளிகள் உண்டு, நாச்சிமுத்துக்களும்தான் உண்டு!! பெற்றெடுத்த தாயைக் காப்பாற்றும் அளவுக்கு இருந்துவந்த பிழைப்பில், மண் விழுந்தது! வேலை போய்விட்டது! நாச்சிமுத்து பாய்மரமற்றதோணி! வாழ்க்கைக் கடலிலே கிளம்பும்கொடிய அல்லல் அலைகள், அவனைத் தாக்கின! வயதோ பதினேழு! வாழ்க்கையை நகர்த்திச் செல்வதற்கு ஒரு வேலை வேண்டும்! வேலை இல்லை! வேலை கிடைக்கவில்லை! அவன் பஞ்சை—பராரி! பாட்டாளிப் பரம்பரை! உழைக்கச் சித்தமாக இருந்தான், ஆனால் மனிதாபிமானத்தை இழந்துவிட்டிருக்கும் இந்தச் சமுதாய அமைப்பு முறையிலே, அவன் உழைப்பை வாங்கும் ஆட்கள் கிடைக்கவில்லை. வீரம்மாள் விம்மினாள்! நாச்சிமுத்து கலங்கினான்! நாடு, இந்த நாதியற்றவர்களை ஏறெடுத்துப் பார்க்கவில்லை, நாடாள்வோர்களுக்கு, நாச்சிமுத்துக்களின் மீதா நாட்டம் விழும்! அவசர அலுவல்கள், ருசிகரமான விஷயங்கள், ஆயிரமாயிரம் அவர்களுக்கு!!

வேலையை இழந்த மகன்! வேறு கதியற்ற தாய்! இந்தக் குடும்பம், கொட்டும் வறுமையை எப்படிச் சமாளிக்கும். பசி! பட்டினி! திகைப்பு! உலகமே இருண்டு கிடந்தது, அவ்விருவருக்கும்.

நாச்சிமுத்துவுக்கு நய வஞ்சகம் தெரியாது என்பது அவன் நடவடிக்கையால் தெரிகிறது.

ஒரு கத்தை வேப்பிலைக் கொத்தைக் கையில் எடுத்துவைத்துக் கொண்டு, வாழ்க்கையை நடத்துபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்!

பல்லைக் காட்டிப் பிச்சைப் பிழைப்பு நடத்துவோர் இருக்கத்தான் செய்கிறார்கள்!

சூதுசெய்து சுகம் தேடுவோர், சூழ்ச்சிசெய்து பொருள் திரட்டுவோர், புரட்டினாலேயே வாழ்வோர் உலவுகிறார்கள்!

கள்ளர்கள் உள்ளனர் — பலரகமானவர்கள்! கன்னம் வைக்கும் கள்ளனும் இருக்கிறான்! கள்ள மார்க்கட்காரனும் இருக்கிறான்!

நாச்சிமுத்து, நாணயமாக உழைத்து, வாழ விரும்பினான் போலும்! அவனுக்கு இடம்தர மறுத்தது, சமூகம். அவன் மனம் உடைந்துவிட்டது!!

தாயின் கண்ணீரை அவன் புரிந்துகொண்டான்.

மகனுடைய பெருமூச்சின் பொருள், தாய்க்குப் புரிந்துவிட்டது.

இந்த உலகிலே இனித் தங்களுக்கு இடம் இல்லை என்பதை இருவரும் தெரிந்துகொண்டனர்.

தென்னையும் பனையும் மழைகாணாமல் நீண்ட நாள் வாழமுடியும்—முல்லைக் கொடியோ பட்டுப் போகிறது.

எத்தன், வாழ்க்கைச்சிக்கல்களைச் சமாளித்துக்கொண்டு, குறுக்குவழிகள் கண்டு பிடித்துப் பிழைத்துக் கொள்கிறான். நாச்சிமுத்து, எத்தனாகவில்லை, கொலைகாரனாகவே துணிந்துவிட்டான்.

என் தாயாருக்கு என்னால் வாழ்வளிக்கமுடியவில்லை.

என்னால் மட்டுமே அந்தக் கடமையை உணரமுடியும்.

சித்தூர் பிரச்னை

பிரிவினையைச் செய்தது இந்திய சர்க்கார். அதன் விளைவாக எழுந்துள்ள அநீதிகளைத் துரிதமாகப் பைசல் செய்வது அவர்களுடைய பொறுப்பு.

தினமணி—ஜூலை 18

என்னிடம்தான், கேட்க, என் தாயாருக்கு உரிமை இருக்கிறது.

ஆனால், என்னால் என் தாயாரைக் காப்பாற்றமுடியவில்லை! வாழவைக்க முடியவில்லை! மலைபோலமகன் இருக்கிறான் என்று விவரம் அறியாதார் பேசத்தான் செய்கிறார்கள்—மகனா நான்—தாயைக் காப்பாற்றும்திறமையற்ற நான் மகன் தானா! நானா!!

அவன் படித்தவனல்ல, பண்பு பற்றி எண்ணிப்பார்க்க-பாட்டாளிக் குடும்பம்—வாழ்வு, சாவு, இரண்டில் ஒன்றுதான் தெரியும்—வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே ஊசலாடிக் கொண்டே, தந்திரமான வழி கண்டு பிடித்துத் தலையைத் தப்பவைத்துக் கொள்வது, தெரியாது.

வாழமுடியவில்லை—எனவே சாகத் தான்வேண்டும் என்ற முடிவுக்குத் தாவினான்.

அம்மட்டோ! தாயை, வாழவைக்க முடியவில்லை, ஆனால் சாகடிக்கக் கூடவா முடியாது! அது முடியும்!!

*

அம்மா!

என்னடா, நாச்சி!

சுற்றிச் சுற்றிப் பலன் இல்லை!

சோர்ந்துதான் போனாயடா, மகனே!

இனி நமக்கு வாழ்வுஇல்லையா தம்மா!

என்னடா, நாச்சீ, சொல்கிறாய்!

நாம் உயிரோடு இருப்பது ஏனம்மா இனி?

உண்மைதான்!

அம்மா!

என்னடா, கண்ணு!

என்னால் சகிக்க முடியவில்லை இந்த வேதனையை — தாங்கிக் கொள்ள முடியாது — நான் சாகத் துணிந்துவிட்டேனம்மா......

ஐயோ! மகனே! இதென்ன பேச்சடா பேசுகிறாய்......

நாம் வேறு எவ்விதம் பேசமுடியுமம்மா—வேறு எவ்விதம்......!

உன்னைச் சாகவிடுவதா, மகனே! இதற்கா, உன்னைப் பெற்று வளர்த்தேன், இந்தப் பாவி! என் காதிலே, இந்த வேதனையைப் புகுத்த எப்படியடா நாச்சி! மனம் இடம் தந்தது! மகனே! நீ சாகவாவது— நான் அதைக் காணவாவது — இப்போது சம்மதம் என்று சொல், நானு இடம் பிச்சை எடுக்கிறேன். என் கருவில் உனக்கு உருவம் வராக் காலத்திலெல்லாம் வைத்துக் காப்பாற்றியவளல்லவா, நான். இப்போது மட்டும் எனக்கு அந்தத் திறமை எப்படிப் போய்விடும்......

அன்புத் தாயே! அசட்டுத்தாயே! அக்ரமம் நிறைந்த உலகிலே, நாம் பலிபீடத்துக்கு இழுத்துச்செல்லப்படுவதை அறியாமலிருக்கும், என் அருமைத்தாயே!

மகனே! ஆயிரம் பேசு, அந்த ஒரு வார்த்தை மட்டும் பேசாதே. சாகிறேன் என்று மட்டும் சொல்லாதே.

சொல்லத்தான் கூடாதம்மா' சொல்லத்தான் கூடாது!!

*

சம்பவம் நடைபெற்றன பிறகு, இப்படிப்பட்ட உரையாடல்கள் உருவெடுக்கின்றன. அந்தத்தாயும் மகனும் இதுபோலெல்லாம் தத்துவம் பேசிக்கொள்ளும் நிலையினர் அல்ல! ஏதுமறியா ஏழைகள்! நாதியற்ற மனித உருவங்கள்! மனித உருவங்களா.........இல்லை, இல்லை, நடைப்பிணங்கள். சாவு தவிர அவர்களிடம் சொந்தம் கொண்டாட வேறு எதுவும் இல்லை.

*

நான் இறந்து, தாய் இருந்தால்! நான் இருக்கும்போதே, இந்தக் கோலம், நானும் இறந்துபோனால், தாயின் கதி! — அதை எண்ணி அந்த ஏழை எவ்வளவு பதறினானோ யார் கண்டார்கள்.

ஏதாவது ஒரு விபத்து நேரிட்டு, மகன் இறந்து விட்டால், பிறகு, நான்...ஐயோ! நினைக்கும்போதே, நெஞ்சு பகீர் என்கிறதே—என்று அந்தத்தாய் எண்ணித் தத்தளித்தது எப்படி எப்படியோ!

சாவு, தங்களை அழைக்கிறது என்பதை அறிந்தனர் — முதலில் திடுக்கிட்டுப் போயிருப்பர், ஆனால் மெள்ளமெள்ள, அவர்கள் அமைதியாகவே, சாவு பற்றி எண்ணிப் பார்க்கத் தொடங்கியிருப்பர்.

சாவு! அதனாலே நமக்கு என்ன பெரிய மாறுதல் ஏற்பட்டுவிடப் போகிறது!! உலகு கண்டு நகைக்கும் இரு உருவங்கள், மண்ணோடு மண்ணாகும்! அவ்வளவுதானே! வேறென்ன! சாவாம்சாவு! வாழ்ந்து கொண்டிருப்பவர்களல்லவா சாவுக்கு அஞ்சவேண்டும்! நாம் வாழ்கிறோமா, என்ன!!

இருவர் மனமும் அந்த இறுதிக் கட்டத்தை, அச்சமின்றிச் சென்று அடையும் பக்குவ நிலையைப் பெற்றது! ஆயிரம்முறை கீதை படித்தவனும், பதினாயிரம் முறை வாழ்க்கை நிலையாமை என்பது பற்றிய உபதேசம் கேட்டவனும்கூடப் பெற முடியாத மனநிறைவை வறுமை, அவர்களுக்குத் தந்துவிட்டது! உல்லாசப்படகிலே எதிர்ச் செல்பவனுக்கல்லவா, கடலின் கொந்தளிப்புக் கண்டு கிலி உண்டாகும், அந்தக் கடலிலே மிதக்கும் சிறு மரத்துண்டுக்கு, என்ன கிலி! அலை, மலை போலாகட்டும், சுழல் வேகமாகட்டும், பயம் என்ன! நாச்சிமுத்துவும் வீரம்மாவும், வாழ்க்கைக் கடலிலே வறுமைச் சூறாவளியில் மிதந்து கொண்டிருந்த இரு மாமிசப்பிண்டங்கள்!!

*

ஒரு முடிவுக்கு வந்தனர் இருவரும்—சாவு தங்களை நாடி வருகிற வரையில் காத்துக் கிடப்பதைவிட, சாவைத் தாங்களே தேடிக் கொள்வது என்ற முடிவுதான்! புலிக்குப் பயந்து கொண்டு புதரில் பதுங்கி என்ன பலன் — அங்கே சிறும் நாகம் தீண்டக்கூடும்! புலியைத் தேடிக் கொண்டே, போய் விடுவோம், அடர்ந்த காட்டிலே செல்வோம், என்று துணிந்தனர்.

இருவர் இருக்கிறோம்—ஒருவரை ஒருவர் வாழவைக்கத்தான் முடியவில்லை—சாகடித்துக் கொள்ளக் கூடவா, ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்ள முடியாது—அது எளிதில் முடியுமே!

மகன் இறந்து நான் அதைக் காண்பது, எனக்குச் சாவினும் கொடியதாகும்—மகன் உயிருடன் இருக்கும்போதே நான் சாவைத் தழுவிக்கொள்வேன். அவனைக் கண்டவண்ணமே என் கண்கள் மூடிவிடட்டும்! அவன் கரத்தை, என் முகத்தில் வைத்தபடி சாவது,

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 25—7—54 [ஞாயிறு

ஒளி கிடைத்திருக்கிறது

★

அணுகுண்டு! நீர்வளிக்குண்டு! நச்சுக்காற்றூட்டும் கருவிகள்! சில மணி நேரத்தில் உலகைச் சுடுகாடு ஆக்கிவிடத்தக்க அழிவுக் கருவிகள் குவிந்துள்ளன, மலைமலையாக! மக்களின் நல்வாழ்வுக்கான திட்டம் தீட்டவோ, பணம் செலவிடவோ மனமற்றுக்கிடக்கும் வல்லரசுகள், குருதிக் கடலிலே பிணமலைகளை மிதந்திடச் செய்யும் பேய்த்திட்டத்துக்குப் பெரும் பொருள் செலவிட்டு, பீதி கிளப்பியும் பீதி உட்கொண்டும், உள்ளதோர் பயமூட்டும் நிலையில், சிக்கிக்கிடக்கும் உலகுக்குச் சிறிதளவு நம்பிக்கையும், பெருமளவுக்கு மகிழ்ச்சியும் தரத்தக்க நற்செய்தி கிடைத்திருக்கிறது. போர் நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது! இந்தோ—சீனப்போர் நிறுத்தப்படுவது என்று ஒப்பந்தம் நிறைவேறிவிட்டது. பிரன்ச்சு வல்லரசுக்கும், இந்தோ—சீன விடுதலை வீரன் ஹோசிமின்னுக்கும், ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது! போருக்கு ஓய்வு! வேட்டுச்சத்தம் கேட்டுக் கேட்டுக் காது செவிடுபட்டும், கருத்து துளைக்கப்பட்டும் போய்க்கிடக்கும் மக்களுக்கு சிறிதளவு நிம்மதி.

கோடிக்கணக்கான மக்கள் முகத்திலே புன்னகையும், உள்ளத்திலே களிப்பும் பூத்துக்குலுங்கும் ஜீவிதமான நிகழ்ச்சி ஜூலைத் திங்கள் இருபதாம் நாள் நடைபெற்றிருக்கிறது—போரில் ஈடுபட்டிருந்த இருதரப்பினரும், போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்!

இந்தோ—சீனப்போர் உலகப் பெரும் போராக உருவெடுத்துவிடும், அணுகுண்டுகளை ஒருவர் மீதொருவர் வீசிக்கொண்டு, அனைவரும் அழிந்துபடுவர், என்று அச்சப்படத்தக்க வகையிலே, சம்பவங்கள், சீறிக்கொண்டு கிளம்பின. அழிவுக்கு அழைப்பு விடுவதிலே அக்கறை காட்டி வந்த வல்லரசுகள், பெருஞ் சிறகு படைத்த பிணங்கொத்திப் பறவைகள் களம்நோக்கி வட்டமிட்டுச் செல்வது போல, கலகங்களை மூட்டி விட்டுவந்தன. இந்தோ—சீனப்போர், மூன்றாம் உலகப் பெரும் போராகி, மனித குலத்தின் முடிவுக்காலமாகி விடக்கூடும் என்று அஞ்சப்பட்டது.

படைகள் கிளம்பின—பிணமாயினர் வீரர் — புதுப்படைகள் திரட்டப்பட்டன!

நகரங்கள் தாக்கப்பட்டன—குப்பைமேடுகளாயின — மேலும் பல புது நகர்கள்மீது தாக்குதல்கள்!

கொட்டப்பட்ட குருதி கொஞ்சமல்ல! இறந்துபட்டவர்களின் தொகை ஏராளம் — அதிலே இளைஞரே அதிகம்! பாழாக்கப்பட்ட பணம், இந்தப் பாரிலே, பஞ்சத்தையும் பட்டினியையும் போக்கவல்ல அளவு! ஏழரை ஆண்டுகளாகப் போர்! பிரன்சுத்தரப்பில் மட்டும் 100,000 வீரர் மடிந்துள்ளனர்!! 114,000 வீரர்களுக்குக் காயம்! சிறைப்பட்டவர்கள் ஏராளம். செலவு 3804 கோடி ரூபாய்! ஹோசிமின் தரப்பின் கணக்கு, இதற்குக் குறைவாக இருக்கமுடியாது. ஏழரை ஆண்டுக் காலப் போர், பயங்கரமான பலிகொண்டுவிட்டது—மேலும் பலிகொண்டு பலி தேடிடாமல், இப்போதேனும் போர் நிறுத்தத்துக்கு இணங்கினரே என்று எண்ணி, மனத்திருப்தி அடையவேண்டி இருக்கிறது.

ஏழரை ஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டு வரும் இந்தப் போரிலே, நாட்டுப்பற்றும் விடுதலை உணர்ச்சியும், தியாகச் சிந்தனையும் கொழுந்து விட்டெரியும் உள்ளத்தினரான, இந்தோ சீன மக்கள் ஒருபுறம், ஏகாதிபத்ய வெறிபிடித்தலைந்து, பிற்படுத்தப்பட்ட நாடுகளைச் சுரண்டிக் கொழுக்கும் பேராசைப் பித்தம் பிடித்தலையும் பிரன்ச்சு வல்லரசு திரட்டிய போர் வீரர்கள் மற்றோர்புறம்! உரிமைக்கும் எதேச்சாதிகாரத்துக்கும், நீதிக்கும் அக்ரமத்துக்கும் இடையே மூண்ட போர் இது. உலகக் காப்பியங்களிலே இடம்பெறத்தக்க சம்பவங்கள், மயிர்க்கூச்செறியும் வகையான நிகழ்ச்சிகள், உள்ளத்தைக் குலுக்கிடும் நடவடிக்கைகள் பலப்பல, இந்த ஏழரை ஆண்டுக் காலத்தில்!

மக்களின் ஒப்பற்ற தலைவர் என்ற மதிப்புப் பெறுகிறார், ஹோ! அவரை, மிருகத்தை வேட்டையாடுவதுபோலத் துரத்துகிறது பிரன்ச்சு வெறி அரசு! கடும் போர்! இடைவிடாத போர்! மலைகளில், காடுகளில், ஆற்றோரத்தில், வயல் வெளிகளில், நகர்களில்; எங்கும் போர் மூண்டது! இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வு நாசமாக்கப்பட்டது—குடும்பங்கள் சிதறின—இளைஞர்கள் பச்சை இரத்தம் பரிமாறினர்—எல்லாம் சுரண்டும் போக்கினால் வந்த விளைவு.

இந்தோ-சீனா, இன்று களத்திலே ஏற்பட்ட புண்களையே அணிகலனாகக்கொண்ட வெற்றி வீரனின் நிலையிலிருக்கிறது ஆனால், போர் வெறியர்களும் ஏகாதிபத்ய ஆணவக்காரரும் கேடு செய்யாதிருந்திருப்பின், அந்நாடு, இயற்கைஎழில் குலுங்கும் இன்பச் சோலையாகக் காட்சி தந்திருக்கும்.

வளம் உண்டு! உழைத்து அந்த வளத்துக்கு வண்ணமும் பயனும் பெற்றுத்தரும் திறமை படைத்த மக்கள் உண்டு! ஆறுகளும் பெருங்காடுகளும், அழகு நகர்களும் பசுஞ் சோலைகளும், ஆசியாவின் நெற்களஞ்சியம் என்ற நிலைபெறத் தக்கதான வயல்களும் கொண்டது, இந்தோ-சீனா. ஏகாதிபத்யத்தின் சுரண்டல் சக்கரத்தில் சிக்கித் தவிக்கும் நிலையிலும், இந்தோ-சீனா ஆண்டுக்கு பதினைந்து இலட்சம் டன் அளவுக்கு நெல் ஏற்றுமதி செய்யமுடிந்தது. கப்பும் தென்னையும், மிளகும் ரப்பரும், இங்கு பெரும் அளவு கிடைக்கிறது. பவள இதழ்போல், இவை, எனின், வாய் திறந்தால் தெரியும் முத்துப் பற்களின் வனப்பே, இதனினும் கவர்ச்சிகரமானது என்பதுபோல வெளியே காட்சியாகத் தெரியும் பொருள்களைவிட, அருமையிருந்த

பொருள்கள், இந்தோ-சீனாவில் புதையுண்டு கிடக்கின்றன.

நிலக்கரி, துத்தநாகம், தகரம், ஈயம், இரும்பு, வெள்ளி, மாங்கனீஸ், பாஸ்பேட்கள், உல்பரம், டங்ஸ்டன்—பட்டியல், தொழில் துறையில் முன்னேறியுள்ள எந்த நாடும் கண்டு வியக்கத்தக்கவகையில் இருக்கிறது.

இவ்வளவு வளமும் உலகுக்கோ, இந்தோ-சீன மக்களுக்குகோ பயன்படவில்லை—ஒரு சில பிரன்ச்சு முதலாளிகளுக்கு, அவர்களின் பாரீஸ் நடனத்திற்கும், பலவகையான களியாட்டத்துக்கும் தான் பயன்பட்டது. நாடு வளமானது—மக்கள் தொகையும் நெருக்கடி தரும் அளவில் இல்லை, மூன்று கோடிக்கும் குறைவு.

ஹோசிமின், தாயகம் தளையுண்டு கிடப்பதுகண்டார், மனம், அனலிடு மெழுகாயிற்று, வளங்கள் சுரண்டப்படுவதும், மக்கள் வறியருகித்தேம்பித் தவிப்பதும் கண்டார், போர் தொடுத்தார்! வெற்றிபல கண்டார், திகைப்பூட்டும் தோல்விகளும் அவரைத் தாக்கின! கடும்போரில் ஈடுபட்டார், அதே போது, சமரசத்திலும் நாட்டம்கொண்டார்! பிரன்ச்சு ஏகாதிபத்யம், இந்தோ சீனாவில், பொம்மை அரசர்களையும், போக போக்கியத்துக்கு ஆசைப்படும் சீமான்களையும், பாரீஸ் பானத்தால் சொக்கவைத்து, காலந்தள்ளப்பார்த்தது! ஹோவின் வெற்றி முழக்கம், நாளுக்கு நாள் வலுத்தது. சீனா விடுதலை பெற்றது, அங்கிருந்து கிடைத்த 'உதவி', ஹோவின் கரத்துக்குப் புதுவலிவு கொடுத்தது. பிரான்சு கடையைக் கட்டித்தான் தீரவேண்டும் என்று முடிவுசெய்த நேரத்தில், அமெரிக்கா நுழைந்தது, டாலர் மழை பொழிந்தது. பலன் என்ன? மேலும் இரத்தம் ஆறாக ஓடிற்று. ஆனால், வீறு கொண்டெழுந்த விடுதலை இயக்கத்தைப் பணகுண்டு என்ன செய்ய இயலும். தீன்-பீன்-பூ கோட்டை வீழ்ந்தது, பிரன்ச்சு வல்லரசுக்கு நடுக்கமெடுத்துக்கொண்டது. அமெரிக்கா டாலர் தரும், ஆனால் பிரான்சல்லவா, இளைஞர்களைக் களத்துக்குக் காணிக்கையாகத் தரவேண்டும்! அதிலும் ஒரு அக்ரமத்தை நிலைநிறுத்த!! எனவே ஜெனிவா மாநாடு நடைபெற்றது. ஒரு திங்களில் சமரசம், இல்லையேல் ராஜிநாமா, என்ற சூள் உரைத்தபடி பதவி ஏற்ற மெண்டிஸ் பிரான்ஸ், அரும்பாடுபட்டார்; சீனப் பிரதமர் சோ-இன்-லாயும், பிரிட்டிஷ் ராஜதந்திரி ஈடனும், ரஷிய நாட்டு மலடோவும் ஒத்துழைத்தனர்—மெண்டிஸ் சூள் உரைத்தபடியே, ஒரு திங்களில்—ஜூலை 20-ல், போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. ஒளி கிடைத்திருக்கிறது! ஹோசிமின் என்றாலே, ஒளி அளிப்பவர் என்றுதான் பொருளாம்!! கிடைத்துள்ள ஒளிவளரவும், நிலைக்கவும் உலகு முழுவதும் பரவி, சாந்தியையும் சமாதானத்தையும் சுபிட்சத்தையும், வழங்கத்தக்க முறையில் இனியேனும், வல்லரசுகள் செல்லும்படி, மக்கள் சக்தி கட்டளை பிறப்பிக்க வேண்டும். ஒளி கிடைத்திருக்கிறது, மகிழ்கிறோம்.

★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சாவிலே உள்ள பல வகைகளிலே அதுவே இன்பமானது! — தாயின் உள்ளம் இது.

ஒப்பந்தமே நிறைவேறிவிட்டது! ஒடப்பர் உயரப்பர் என்ற பேதநிலை நாற்றமடிக்கும் சமுதாயத்தில், ஒடப்பர்களால்மட்டுமே செய்துகொள்ளக்கூடிய ஒப்பந்தம். தாய் முதலில் சாவது—மகன் பிறகு! தாயை வழியனுப்பிவிட்டு, மகன் பின் தொடர்வது! மகனுக்கு, இறப்பு எனும் இடத்திலும் தன்னாலான உதவிசெய்யவோ என்னவோ தாய் முதலில் செல்வது, மகன் பிறகு புறப்படுவது என்று ஏற்பாடு செய்யப்பட்டது. மகனன்றி வேறு யார் தாயின் மனதை அறியமுடியும்? தாய்க்கன்றி, மகனின் மனதை அறியும் வல்லமை யாருக்கு உண்டு! அதிலும், இந்தத் தாயும் மகனும், சாவுபற்றிய ஆராய்ச்சியில் முழுமூச்சாக ஈடுபட்டவர்களல்லவா!!

மகன், தாயைக் கொல்வது, பிறகுதான் மடிவது!

சமுதாயம், அணுவணுவாக என் தாயைச் சிதைக்கிறது—ஏன் நான் அதை அனுமதிக்கவேண்டும்—சமுதாயம் செய்யும் சித்ரவதையைத் தடுக்கும் ஆற்றல் இல்லை எனக்கு—சமுதாயத்தைத் தண்டிக்கும் தகுதி எனக்கு அளிக்கப்படவில்லை-ஆனால் என் தாய், சமுதாயத்தின் கோரப் பற்களிலே சிக்கிச் சின்னாபின்னமாக்கப்படாமல் தடுக்கும் சக்தி எனக்கு உண்டு—நாச்சிமுத்துவின் மனதிலே, இப்படிப் பல எண்ணங்கள் சீறிக்கொண்டு வந்தன! கூவரக் கத்தி, சிரித்தது, அழைத்தது—கொலை செய்தான்!

அவன் கொலை செய்தான்!—ஆனால் கொலைத்தொழில் செய்பவனல்லவே—எனவே, அவனாலே தாயை உடனடியாகக் கொல்ல முடியவில்லை! குற்றுயிரானாள். குலை நடுக்கமெடுத்தது, நாச்சிமுத்துவுக்கு. சமுதாயத்தைப்போலவே, அவனாலும் விரம்மாளைச் சித்ரவதைதான் செய்யமுடிந்தது—சாகடிக்க முடியவில்லை!

தாய் இறந்திருந்தால், அவன் உடனே மடிந்திருக்கவேண்டியதுதான்! வெட்டுப்பட்ட கழுத்திலிருந்து குருதி கொட்டுகிறது, உயிர் துடிக்கிறது, கொலைசெய்யக்கூடத் திறமையில்லையே, என்று தாயின் கண்கள் கேட்டனவோ, என்னவோ!

கிலி பிடித்துக்கொண்டது. ஓடினான் ஓடினான், போலீசில் சரண் புகுந்தான்.

ஐயா, நான் கொலை செய்துவிட்டேன்.

படுபாவி! யாரை?

என் தாயாரை!

உன்......?

தாயாரை?

போலீசும் திடுக்கிடத்தானே செய்யும்! அதுவரையில், ஒருவரும் நாச்சிமுத்து, கவனிக்கப்படவேண்டியவன், என்று எண்ணியதில்லை. தாயைக் கொலை செய்தவன் என்று தெரிந்ததும், போலீஸ், அவனைத் தன் பிரத்யேகமான கவனத்தில் வைத்துக் கொண்டது! ஒருவரும், அதுவரையில், எப்படி ஒரு மனம்உடைந்த இளைஞன் இருக்கிறான், என்று கேட்டதில்லை—இப்போது, அவனுடைய சொந்த விஷயங்கள் அவ்வளவையும் அக்கறையுடன் விசாரிக்க, ஒரு அரசாங்க

இலாகாவே முன்வந்தது. அவன் கூலிக்காரனாக இருந்தபோது, அவனை யாரும் அறியார்கள், கொலைகாரனானான். நாடே அவனைப்பற்றிப் பேசலாயிற்று.

வேலை இல்லையா?

ஏன் இல்லை!

என்ன வேலை தெரியும்?

இதற்கு முன்பு என்ன வேலை செய்துவந்தாய்?

என்ன கூலி கிடைத்தது?

யாராரிடம் வேலைக்காகப் போய் வந்தாய்?

வயது என்ன?

நாச்சிமுத்து அலைந்தபோது, இப்படி எல்லாம் கேட்க ஒருவருக்கும் நேரமும் இல்லை, நினைப்பும் இல்லை. அவன் கொலைகாரன் ஆனதும், உயர்தர அதிகாரிகளெல்லாம், அவனுடைய 'வரலாறு' தெரிந்து எழுதும் பேராசிரியர்களாயினர்! நாச்சிமுத்து, மீண்டும் மனிதனானான் — ஒரு கொலை, அவனை மீண்டும், கவனிக்கப்பட வேண்டிய, ஏன், பராமரிக்கப்படவேண்டிய மனிதனாகவே ஆக்கிவிட்டது! மகனை, இந்த 'மனிதத் தன்மைக்கு' கொண்டு போய்ச் சேர்க்கும் மகத்தான 'தொண்டும்' தாய் தந்ததுதான்! தாயே! தாயே!— என்று நாச்சி எவ்வளவு கதறினானோ —அல்லது, கண்ணீரும் வெளிவர முடியாத நிலை பெற்றானோ, யாரறிவர்.

ஜூலை ஆறும் நாள் அவன் தாய்க்கு 'விடுதலை' தர முனைந்தான், பரிபூரண விடுதலை இருபதாம் நாள் தான் கிடைத்தது. அவ்வளவு திறமையற்றுக் கொலைச்செயலைச் செய்திருக்கிறான். அப்பாவி, அவன் என்ன செய்வான்!

*

செஷன்ஸ் ஜட்ஜூ, நாச்சிமுத்து தாயாரைச் சாகடித்தான் என்பதற்காக, ஆயுள் தண்டனை அளித்தார்.

*

உயர் நீதிமன்றம் வந்ததுவழக்கு' உள்ளம் உருக்கும் தகவல்கள் வெளிவந்தன! அவன் கொடியவனல்ல, ஏழை! வாழமுடியாதவன்! என்ற உண்மைகள் வெளிவந்தன.

*

நீதிபதிகள் கூறுகிறார்கள், "இந்த வகை இழந்த வாலிபன், தாயின் வேண்டுகோளின்படியே, அவளைக் கொன்றிருக்கிறான் என்பதில் துளியும் சந்தேகமில்லை. ஆனால், தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் தருணம் வந்தபோது அவன் தைரியம் இழந்து விட்டிருக்கிறான். போலீசுக்குச் சென்று சரண் புகுந்துவிட்டான். ஜெயிலிலிருந்து இவன் அனுப்பிய அப்பீல் மனுவில், தாயாரின் வேண்டுகோளின்படியே தான் கொலை செய்ததாகக் கூறி, குற்றத்தை ஒப்புக்கொண்டு தனக்கு மரணதண்டனை தரவேண்டும் அல்லது பாளையங்கோட்டைக்கு-இளம் குற்றவாளிகள் விடுதிக்கு—அனுப்பவேண்டும் என்று வேண்டிக் கொண்டிருப்பது மேலும் மனதை உருக்கும்விதமாக அமைந்திருக்கிறது."

*

நாச்சிமுத்துவுக்கு, கீழ்க் கோர்ட் அளித்த ஆயுள் தண்டனை இங்கும் உறுதியாயிற்று, ஆனால் அவனுடைய சோகம் கப்பிய, கதை, நாட்டவரை உருகவைக்கும் விதமானது என்பது வெளியாகி இருக்கிறது. அவனைப்பற்றிச் சரியான தகவல்களைத் தெரிந்த பிறகு, சர்க்கார், தண்டனை சம்பந்தமாக ஏதேனும் சலுகை காட்டலாம் என்று கூற வேண்டிய நிலைமைக்கு நீதிபதிகள் வந்தனர், என்றால், நாச்சிமுத்துவின் சோக வரலாறு எப்படிப்பட்டது என்பதை யூகித்துக்கொள்ளலாம்.

*

வகை இழந்தவன்! ஆத்திரத்தால் அறிவிழந்தவன்! விளைவு அறியாது விபரீதச்செயலில் ஈடுபட்டவன்! என்று, என்ன வேண்டுமானாலும் கூறலாம். நாச்சிமுத்து, குற்றம் செய்திருக்கிறான், சொல்லக்கூசும் கொடுமையான குற்றம்! கொலை! பெற்றெடுத்த தாயை!! ஆனால், நீதியும் நியாயமும், சட்டமும் ஒழுங்கும், பக்தியும் சக்தியும், பாராளுமன்றமும் பல்வேறு அமைப்புகளும், அணிசெய்யும் நமது சமுதாயத்தில், 'பெற்றதாயைக் கொன்றுவிட்டுத் தானும் சாகலாம் என்று மனம் உடைந்து, மதிகெட்டு, மருண்டு, இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்து, கொலை செய்ய முற்படும் நாச்சிமுத்து இருக்கிறான்! இந்தச் சமுதாயம், இப்படிப்பட்ட நாச்சிமுத்துக்களை உண்டாக்கித் தருகிறது! வறுமை ஒன்று தவிர, அந்த வாலிபனைக் கொலைகாரனாக்கியதற்கு, வேறு ஒரு காரணமும் காணோம். வறுமை! வாழ வழியற்றுப்போன நிலைமை! அம்மவோ! அது அல்லவா இத்தகைய, பயங்கரமான குற்றத்தையும் தூண்டிவிடுகிறது. நாச்சிமுத்துக்கள் உயர்நீதிமன்றங்களுக்கு இழுத்துவரப்படுவார்கள் — அந்த வல்லமை சமூகத்துக்கு நிச்சயமாக இருக்கிறது — நீதிபதிகள் குற்றத்தின் தன்மைக்கு ஏற்ற தீர்ப்பினைத் தருகிறார்கள் — ஆனால், குற்றம் ஏற்படாமல் தடுக்க, நாச்சிமுத்துக்கள் எழாமலிருக்க, யார் முயற்சிப்பது! நாடாள்வோரின் கடமை அல்லவா அது. நாடாள்வோரை அத்தகைய கடமையை உணர்ந்து பணியாற்றவைக்கும் பெரும் பொறுப்பு நம்மையும்சார்ந்ததல்லவா! நாம் — சமூகம் — நமது கடமையைச் செய்யத்தவறுகிறோம் நாச்சிமுத்துக்களைக் காண்கிறோம். வீரம்மாளைக் கொலை செய்தது நாச்சிமுத்து மட்டுமல்ல, நாமும் தான்! குற்றவாளிகளில் ஒருவன் தான் பிடிபட்டான் — கொடுமைக்கு ஆளான குற்றவாளி, நாச்சி—மற்றவர்கள்.........!!!

படாடோபம் வேண்டாம்!

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டங்களுக்குச் செல்லும், காங்கிரஸ் மந்திரிகள், பெரிய பரிவாரத்துடன் சென்று, தங்கள் படாடோபத்தைக் காட்டிக் கொள்வதால், வரவேற்புக் கமிட்டியினருக்குப் பெருத்த பணச் செலவும் சிரமமும் ஏற்படுவதுடன், மந்திரிகளாகாத காங்கிரசாருக்கு அருவருப்பும் ஏற்படுகிறது. எனவே இம்முறை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்ளவருகிற காங்கிரஸ் மந்திரிகள், பரிவாரத்துடன் வராமல், படாடோபம் காட்டாமல் நடந்துகொள்ளும்படி, காங்கிரஸ் மேலிடத்தார் சம்பந்தப்பட்டவர்களுக்குப் புத்திமதி கூறியுள்ளனர்!!

ஆசிரியர் அவசரசாமி

"பையா! டேய்!பயலே!" என்று அவசரமாக அழைத்தார் ஆசிரியர் அவசரசாமி. ஆபீஸ் பையன் ஏதோ முகவாட்டத்துடன் இருந்தான், எனவே வழக்கமாகச் சிட்டுபோலவருபவன், ஆமையானான். ஆசிரியரோ, ஒரே ஆனந்தமயமாக இருந்தார். முன்தினம் அவர் எழுதிய கட்டுரையில், வசை மொழிகள், மிக மிகக் காரசாரமாக வந்தன! அவர் அந்த வெற்றியிலே களிப்படைந்து இருந்தார்!! சிரங்கு பிடித்தவன், இரத்தம் சொட்டும் வரையிலே சொறிந்துகொள்கிறான், அதிலே ஓர் தனி இன்பமும் காண்கிறானல்லவா! அதுபோல ஆசிரியர் அவசரசாமிக்கு அரிப்பு அடிக்கடிவரும்! மாடு அரிப்பெடுத்தால், சுவரிலே தேய்த்துக்கொள்கிறது, குப்பையில் புரண்டு அரிப்பைத் தீர்த்துக் கொள்ளும் மிருகங்கள் உண்டு, சில வற்றுக்குச் சேற்றிலேயே படுத்துப் புரண்டால்தான் அரிப்புத் தீரும். நமது ஆசிரியரின் அரிப்பு ஒரு நாலு காலமாவது நாராச நடையில் எழுதி, ஆறுதடவை அதையே திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டால்மட்டுமே அடங்கும். அதிலும் அம்முறை அவருடைய நாகல் நடை அவரையே பிரமிக்க வைத்துவிட்டது. அந்த ஆனந்தத்தில், ஆபீஸ் பையனைக் கூப்பிட்டார். அவன், தன் கருத்துடன், தான் கேட்ட கருத்துகளையும் குழைத்தளிப்பது வழக்கம். ஆசிரியருக்கு அது ஒருவகையான டானிக்! அன்று அவன் ஆமையானது ஆசிரியருக்குப் பிடிக்கவில்லை. என்னடா அன்ன நடை போடுகிறாய், என்று கேட்டார். சார்! வேகமாக வந்தால் என்னடா இப்படி போட்மெயில் வேகம்! என்று கேட்கிறீர்கள், நிதானமாக நடந்தாலோ, ஆமை என்கிறீர்கள், உரக்கப்பேசினால், என்னடா கத்துகிறாய் என்று திட்டுகிறீர்கள், மெதுவாகப் பேசினால் என்னடா வாயில் கொழுக்கட்டையா என்று கேட்கிறீர்கள், நான் எப்படி நடந்துகொண்டால் உங்களுக்குத் திருப்தி ஏற்படுமோ, தெரியவில்லை, என்று பையன் சலித்துக்கொண்டான். ஏண்டா! சாயாவுக்குக் காசு இல்லையா, சேளேன், தருகிறேன், என்று ஆசிரியர், அவனுக்கு உபசாரம் செய்துவிட்டு, நேற்றைய தலையங்கத்தைப் பற்றி என்ன அபிப்பிராயம்? என்று கேட்டார். நமக்கு என்ன சார்! புரிகிறது என்று சோகமாகவே கூறினான் பையன்! ச்சீ! இந்தா ஓரணா, போய் சாயா சாப்பிட்டுவிட்டு, வா!—என்று கூறினார், பையன் முகம் மலர்ந்தது, வெளியே கிளம்பினான், ஆசிரியர், டேய்! சாயா கடை சம்பந்தன், சதா நம்ம பத்திரிகைதான் படிப்பானாமே, வாஸ்தவமா என்று கேட்டார், ஆமாம் சார்! நம்ம பத்திரிகை என்றால் உயிர் அவனுக்கு, உங்க எழுத்து என்றால், வெல்லம் அவனுக்கு என்று பையனும் உபசாரம் பேசினான்.

ஆசிரியர் இன்று உள்நாட்டுப் பிரச்னை வேண்டாம் — பயல்கள் நமக்கு வெளிநாட்டுப் பிரச்னையே தெரியாது என்று எண்ணிக்கொள்ளக் கூடும் ஆகவே இன்று வெளிநாட்டுப் பிரச்னைபற்றி எழுதுவோம், என்று தீர்மானித்தார். கருத்துகள், கடுவேகத்துடன் வெளி வந்தன.

ஆசியாவின் அற்புத மனிதர், அறுபதுகோடிமக்களின் அசைக்க முடியாத தலைவர், சுயமரியாதைச் சூறாவளி, புதுசமுதாயச்சிற்பி சோ—என்—லாய்......

எவ்வளவு அடுக்கடுக்காக வார்த்தைகள் வருகின்றன, பாவிப்பயல்கள் எவனும், படாதிபதியிடம் அழைத்துச் செல்லமாட்டேனென்கிறானே, என்று ஆசிரியர் அவசரசாமி எண்ணினார், எத்தனை எத்தனை சிறுகதைகள் தீட்டி வெளியிட்டோம். அவைகளெல்லாம் பெருங்காப்பியங்கள் ஆகவல்ல, சிறுவிதைகளல்லவா, கொட்டகையில் உள்ளோர் எழுந்து ஒருவருக்கொருவர் ரோஷமான குத்துச் சண்டைகுஸ்தி போட்டுக் கொள்ளும்படி செய்யவல்ல சிலம்பக் கூடச் சீறும் நடை இருக்கிறது, சினிமாக்காரர்கள் திரும்பிப்பார்க்கவில்லையே, என்று எண்ணித்துக்கித்தார். பொறு மனமே, பொறு! என்றுசமாதானம் கூறிக்கொண்டு, கட்டுரையைத் தொடர்ந்தார்.

சோ—இன்—லாய், சீனநாட்டு மக்களின் நல்லாதரவை நம்பிக்கையைப்பெற்றது எங்ஙனம்? எங்ஙனம்? அரைடஜன் பேச்சாளர்களின் வாய் வீச்சாலா? நாடகமாடியா? சினிமாக் கதை எழுதியா? அடுக்குமொழி பேசியா? இல்லை! இல்லை! கண்ணீர் பொழிந்தா! அல்ல, அல்ல! செயல், செயல்! செயல்! கனல், கனல், கனல்!........

ஆசிரியர் அவசரசாமிக்கு, மீண்டும் சோகம்வந்தது.

செயல், செயல், செயல்! கனல், கனல், கனல்!—என்ற வார்த்தைகளை மீண்டும் மீண்டும் படித்தார், கண்களிலே புனல் வந்துவிடும் போல் இருந்தது.

ச்சீ! கூடாது, கூடாது, இது அந்தப் பொடிப்பயல்கள் நடை போலிருக்கிறது. கூடவே கூடாது. என்ன இழவோ தெரியவில்லை, அதுகளைத் திட்டித் திட்டி நம்மையும் அறியாமல் நமக்கும் அந்த 'அடுக்கு' எழுதவேண்டுமென்ற ஆசைபிறக்கிறது. ஆசைக்கு அடிமையாகக் கூடாது. நமதுநடை, அலாதியாக இருக்கவேண்டும்—என்று எண்ணினார், செயல், செயல், செயல், கனல், கனல், கனல், என்ற வார்த்தைகளை அடித்துவிட்டார்.

ஈனப்பிறவிகள், மானமற்றவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காகத் திரிபவர்கள், தானென்ற அகம்பாவம் பிடித்தாடும் தறுதலைகள்,............

இது நமது சரக்கு—அற்புதமான பாணி—மூளமளவென்று கிளம்புகிறது—பயல்கள், படித்ததும் நாக்கைப்பிடுங்கிக் கொண்டு சாகவேண்டாமா,......என்று எண்ணினர், புன்னகை பிறந்தது, புதிய வசை மொழிகள் கிளம்பின,

உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த துரோகிகள்! ஊரூருக்கும்ஓடி ஓடிப்போய்ப் பேச்சுக் கச்சேரி நடத்தும் பேதைகள்,.........ஆசிரியர் திடீரெனத் திடுக்கிட்டுப் போனர், ஆமாம் ,சோ—என்—லாயில் துவக்கி, 'இதுகளை'ப்பற்றிஎழுதத்தொடங்கி விட்டோமே, எப்படி இந்த இரண்டையும் ஒட்டவைப்பது, சோவுக்கும் இதுகளுக்கும்என்ன சம்பந்தம் என்று ஒருகணம் யோசித்தார். அவருக்கு என்ன ஒட்டுவித்தையா தெரியாது.

இப்படிப்பட்டவர்களுக்கு சோ—இன்-லாயின் அருமை பெருமை என்ன தெரியும்........என்று எழுதினர். ஆபீஸ்பையன், 'சாயா' சாப்பிட்டுவிட்டு, வந்து சேர்ந்தான்.

பயலே! எங்கே பார்க்கலாம்! எதைப்பற்றிஎழுதுகிறேன்சொல்லு பார்ப்போம்—என்று கேட்டார்.

கொள்ளைச் சம்பளம் ஒழிக! என்பதுபற்றி எழுதப்போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தீரே நாலு நாளைக்கு முன்பு...என்றான்பையன்.

நாலு நாளைக்கு முன்பு! மடையா! நாலு நாட்களில்இந்த நானிலம் எவ்வளவு மாறி இருக்கிறது தெரியுமா! என்று ஒரு தத்துவம் தந்துவிட்டு, சோ—இன்-லாய் பற்றி எழுதுகிறேன் என்று பூரிப்புடன் கூறினர்.

சோ—இன்—லாய் பற்றியா? ஏன், சார்! சீனநாட்டுத்தலைவர்பற்றியா?—என்று ஆபீஸ் பையன் கேட்டான்.

ஆமாமடா ஆமாம்! என்றார் அவசரசாமி.

சார்! எழுதாதீர்கள். வேண்டாம், அந்த ஆசாமியைப்பற்றி எழுதவே கூடாது.

ஏன், என்னடா விஷயம்? சோ-இன்-லாய், தெரியாதாடா உனக்கு, சீன நாட்டுச் சிகப்புப் படையின் சீர் மிக்க தலைவன் என்று சினிமாக்காரர்களுக்குக் கதை எழுதும் சில ஓண்டிகள் கூறுவார்களே, அந்தச் சோ........

தெரியும், சார், தெரியும்! சாயாக் கடை சம்பந்தன் கூட நேற்று படம் வாங்கிமாட்டியிருக்கிறான், தெரியும் ......அந்த ஆசாமி, நமது கொள்கைக்குப் பெரிய கேடு செய்து விட்டார், பெரிய கேடு........ நமது முகத்தில் கரி பூசிவிட்டார் என்று கூடச் சொல்லலாம்......

சோ, வா? நமது முகத்தில் கரி பூசி விட்டாரா?

கோபிக்காமலிருந்தால், சொல்கிறேன், சார்! நமது முகத்தில் என்று, உபசாரத்துக்காகச் சொன்னேன், உண்மையைச் சொல்வதானல், உமது முகத்தில் கரி பூசி விட்டார் என்றுதான் பொருள்...

போக்கிரிப் பயலே! போக்கிடமற்றவனே! பொறுப்பற்ற சிறுவா! ....

சார்! சார்! போன வாரத்துத் தலையங்கம் தானே இது......

விளையாடுவது பிறகு, விஷயத்துக்குவா, சோ நமதுகொள்கையைக் கெடுத்து விட்டாரா!—எப்படி?

சார்! இந்தச் சினிமாக்காரர்கள், நாடகமாடிகள், இவர்களை அரசியலில், பொது மேடையில், கல்லூரிகளில், பேசவிடுவதும், இடமளித்து மதிப்பளிப்பதும், மகா கேவலம், சுத்தஅறிவுச் சூன்யமான காரியம், என்றெல்லாம் எழுதுகிறீர்களல்லவா........

ஆமாம், அடிக்கடி எழுதுவேன். இந்தச் சினிமாக்காரர்கள், அந்தச் 'சிறுவர்களுடன்' சேர்ந்துகொண்டு பேசும் போதெல்லாம், எழுதுவேன்........

அது ஒரு கொள்கைதானே......

ஆமாம், மறுக்க முடியாத கொள்கை. கோபுரத்தின்மீதேறிக் கூடக் கூவுவேன்.

கோபுரத்தின் மீதா! போங்கசார்! டாக்டர் தான் உங்களை மாடி மீதே கூட ஏறக் கூடாதுஎன்று கூறியிருக்கிறாரே......

போடா குறும்பா! சரி, அந்தக் கொள்கைக்கும் சோவுக்கும் என்ன சம்பந்தம்?

சமூக சீர்திருத்தம், நாட்டு விடுதலை, மக்கள் முன்னேற்றம், மறுமலர்ச்சி, இப்படிப்பட்ட விஷயமாக நடிகர்கள் பொதுக் கூட்டங்களில் பேசுவது, பொது வாழ்வின் அந்தஸ்த்தையே குறைத்து விடுகிறது, கேவலப்படுத்துகிறது என்று கண்டித்து எழுதியிருக்கிறீர் அல்லவா...

எழுதாமல் இருப்பேனா! காஞ்சிபுரம் மாநாட்டுக்கு என். எஸ். கிருஷ்ணனும், எம். ஜி. ராமச்சந்திரனுமாம்... சரியா... பொதட்டூர் போட்டையில் கே. ஆர். ராமசாமியாம்...நியாயமா?...

புரிகிறது சார்; ஆனல் அந்தப் பொல்லாத சோ, என்ன செய்திருக்கிறார், தெரியுமா!

என்ன...என்ன... ஏதாவது சினிமா போய்ப்பார்த்தாரா! அது ஒரு பெரியதவறு அல்ல...நான்கூட எப்போதாவது போவதுண்டு...

சினிமா போகவில்லைசார், சினிமாக்காரரை, வரவேற்று உபசரித்து சரிசமமாக உட்காரவைத்துக் கொண்டு, விருந்து நடத்தி இருக்கிறார்...

யார்? சோ, வா?

ஐரோப்பாவும் ஆசியாவும் அமெரிக்காவும், அகிலம்முழுவதும்இந்தச் சோவுடைய பேச்சையும் போக்கையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது. அவருடைய சுட்டுவிரல் காட்டும் வழி செல்ல, 60 கோடி மக்கள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். உலக சமாதானம் அவருடைய கரத்தில் இருக்கிறது. ஜெனிவா, மாநாடு, அவருடைய புகழைப் பன்மடங்கு அதிகமாக்கிவிட்டது. மலடோவும், மெண்டிஸ் பிரான்சும், ஈடனும் அவருடன் கலந்து பேசி, உலகப் பிரச்னைகளைத் தீர்த்து விடலாம் என்று எண்ணுகிறார்கள். அப்படிப்பட்ட சோ—இன்—லாய், பல நாட்டுத் தலைவர்களும், ராஜதந்திரிகளும், கலந்து பேசவேண்டும், எங்கே, சந்திக்கலாம், எப்போது சந்திக்கலாம் என்று ஆவலுடன் அழைப்பு அனுப்பும்நிலையில் உள்ள சோ, ஒரு பெரிய புரட்சியை நடாத்திய பெரும் தலைவர்களில் ஒருவர், சீனநாட்டுச் சிங்கம், ஜெனிவாவில், ஆயிரம் காமிராக்காரர்கள், அவருடைய புன்சிரிப்பையும், கண்

சிமிட்டலையும், கரம் அசைவதையும், படமாக்கக் காத்துக் கிடக்கும் வேளையில், நூற்றுக்கணக்கான நிருபர்கள், அவருடைய தும்மலுக்கும் இருமலுக்கும் கூடப் பொருள் கண்டுபிடித்துக் கொட்டை எழுத்தில் போடக் காத்துக் கொண்டிருக்கும் நிலையில்,......என்ன செய்தார் தெரியுமா. நகைச்சுவை நடிகர், சார்லி சாப்ளினுக்கு விருந்து நடத்தினர், சார்!, விருந்து—சினிமாக்காரருக்குச் சீனப்பிரதமர் விருந்தளிக்கிறார்—அதுவும் இந்த நேரத்தில்—உலகப் பெரும் பிரச்னைகள் உருவாகும் நேரத்தில் — உலகப் போர்மூளாவண்ணம் தடுக்கமுயற்சி எடுத்துக்கொள்ளப்படும் ஜெனிவாவில்! நாம் இங்கு, இந்த சினிமாக்காரர்களைப் பொது மேடைக்கு வரவிடக் கூடாது என்று அதிர்வேட்டு நடையில் எழுதுகிறோம். சினிமாக்காரர்களுடன் பொதுவாழ்வுத்துறையில் 'சவகாசம்' வைத்திருப்பவர்களை, 'சின்னப் பிள்ளைகள்' என்று நையாண்டி செய்கிறோம், அங்கே, அந்தச் சோ-இன்-லாய் ராஜதந்திரிகள் பேட்டிக்குக் காத்துக்கொண்டிருக்கும்போது, உலகப் பெரும் பிரச்னைபற்றிய பேச்சு நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, சார்லி சாப்ளின் எனும் நடிகனை, மதித்து அழைத்து, மனமகிழ்ச்சியுடன் விருந்தளித்து, சரிசமமாக நடத்தி, இருக்கிறார்......

ஆசிரியர் அவசரசாமிக்கு உண்மையாகவே துக்கம், திகைப்பு கோபம், பயம், எல்லாம்!

சே! உலகம்என்ன இப்படிக் கெட்டுக்கொண்டு வருகிறது! சார்லிசாப்ளின் யார்? நமது நாட்டு, நகைச்சுவை மன்னன் என். எஸ். கிருஷ்ணன் போல, அங்கு இருப்பவர். அந்த ஆசாமிக்கு, ஒரு பெரிய அரசியல் தலைவர், நாட்டின் தலைவர், புரட்சித் தலைவர், விருந்தளிப்பதா? என்ன கேவலம், என்ன கொடுமை என்றுஎண்ணினர். ஆபீஸ்பையன், தினசரியை நீட்டினன்.

படி! என்று ஆசிரியர் கூறினர்—சிந்தனை!

சோ-இன்-லாய், தாம் தங்கியுள்ள மாளிகையில், பிரபல சினிமா நடிகர் சார்லிசாப்ளினுக்கும் அவருடைய மனைவிக்கும் ஒரு விருந்தளித்தார்.

சோ-இன்-லாய், சார்லிசாப்ளினுடைய படங்களைக் கண்டு மகிழ்பவர் என்று தெரிகிறது.

சார்லிசாப்ளின் தமது நடிப்புத் திறமையால், உலகுக்கு மகிழ்ச்சியும், மதியும் கலந்து அளிக்கும் மகத்தான சேவை செய்பவர் என்று அவரிடம் சோ-என்-லாய்க்கு மதிப்பு.

சார்லிசாப்ளின், உலக சமாதானத்துக்காகப் பாடுபடுபவர் என்பதைப் பாராட்டி உலக சமாதானப் பரிசு' சென்ற ஆண்டு, அவருக்கு அளிக்கப்பட்டது.

சோ-இன்-லாய், மலடோவுடன் பேசிவிட்டு சரியாகமாலை 6மணிக்கு மாளிகைக்குவந்தார், விருந்துபசாரம் நடைபெற்றது

சோ—இன்—லாய், நகைச்சுவை ரசிகர், என்பதுஅவர் ராஜதந்திரிகளுடன் பேசும்போதெல்லாம் கூடத் தெரிந்தது.

போதும், நிறுத்து...சோவும் கெட்டுப்போய்விட்டார். சினிமாக்காரனுக்கு இப்படி ஒரு மரியாதையும் மதிப்பும், தருவதென்றால், பொதுவாழ்வு, என்ன கதியாவது! —என்றுகூறிவிட்டு, சோ பற்றிஎழுதிய தாட்களைக் கசக்கிக் கீழே போட்டுவிட்டு, குறிப்புப் புத்தகத்தைப் புரட்டினர், என்ன எழுதலாம் என்றுபார்க்க. நகைச்சுவை மன்னரின் ஈரோடு மாநாட்டுப்பிரசங்கம்—என்று ஒரு குறிப்புஇருந்தது —பையன் இது என்ன சார்...? என்று கேட்டான். ஆசிரியர்பதில் அளிக்கவில்லை. வெட்கம்இருக்காதா பாபம்!

ஈரோட்டில், திராவிடர் கழகம் நடத்திய மகாநாட்டில், நகைச்சுவை மன்னர் N. S. கிருஷ்ணன் காந்தியார் படத்திறப்பு விழா ஆற்றியது பற்றிய குறிப்பு அது.

குறிப்புப் புத்தகத்தை ஆசிரியர் அவசரசாமி மூடி வைத்துவிட்டார். சாயாக் கடை சம்பந்தம், N S. கிருஷ்ணன்'பிளேட்'வைக்கலானன் .... ஆசிரியர் செவியில்,

கலைஞர்கள் வேண்டும், வேண்டும்
என்றது அந்தக் காலம்
அது கசக்குது கசக்குது என்று
சொல்வது இந்தக் காலம்!

என்று விழுந்தது!! ⊛

வீண் வழக்குகள்

நவநாகரிகப் பெண்மணிகளை அவதூறு செய்யும் வகையில் நாடகம் நடத்தியதற்காக, ஒரு டிராமா கம்பெனிமீது ஒரு இலட்ச ரூபாய்க்கு மான நஷ்ட வழக்கு!

மைசூர் சிம்மாசனத்தைப் பெற என் முன்னோர் ஒருவர் உதவி செய்திருக்கிறார், எனவே, இதற்கு ஈடாக, ரூபாய் 15 இலட்சம் தரவேண்டும் என்று, மத்ய சர்க்கார், சென்னை சர்க்கார், மைசூர் சர்க்கார் ஆகிய மூன்றின்மீதும் ஒரு வழக்கு!

பெண்களுக்குக் கட்டாயமாகக் கலியாணம் செய்தே ஆகவேண்டும் என்று இந்திய அரசியல் சட்டம் திட்டவட்டமாகக் கூறுதபோது, ஏன் உமது மகளுக்குக் கலியாணம் செய்துவைத்தீர் என்று கேட்டு ஒரு வக்கீலின்மீது வழக்கு!

இவ்விதமான விசித்திரமான வழக்குகளைத் தொடுத்தபடி இருந்தார் ஒரு வழக்கறிஞர், சென்னையில்! இந்த விசித்திரசித்தர், ஒரு அம்மையார்! M. A. ஜானகி எனும் வழக்கறிஞர்.

இப்படிப்பட்ட வீண் வழக்குகளைத் தொடுத்து, கோர்ட்டாரின் காலத்தைப் பாழாக்குவதற்காக, இந்த அம்மையார்மீது, சென்னை உயர்நீதி மன்றத்தார், வீண் வழக்காடுவது சம்பந்தமாக உள்ள சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளனர்.

இனி இந்த அம்மையார், சிவில் வழக்கோ கிரிமினல் வழக்கோ தொடுக்குமுன்பு, உயர்நீதி மன்றத்தின் அனுமதியின்றி (சென்னையில்) வழக்காடக்கூடாது என்றும் ஜில்லாக்களில், ஜில்லா ஜட்ஜு அனுமதியின்றி வழக்காடலாகாது என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

வீண் வழக்குகளை நடத்துவதே இந்த அம்மையின் வாடிக்கையாகி விட்டது, என்று இந்த உத்தரவு பிறப்பித்த பிரதம நீதிபதியும், நீதிபதி சோமசுந்தரம் அவர்களும் கூறியிருக்கிறார்கள். ஜுலை 14ல் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

★

11. பாக்யபவனத்தில் பரபரப்பு

"ஆமாம்! எங்கேயோ. வெளியூர் போகணும் என்று சொன்னாங்க. சரி, குப்பா! நான் வேறு உடை போட்டுக் கொள்ளணுமே!" என்றான் பேச்சைமாற்ற.

"உனக்கென்னப்பா, டிராயிங்குக் குறைச்சல்; உன் அறையிலேதான் வேணுங்கிறது இருக்கே!"

"அதுசரி அறைசாத்தியிருக்கே"

"சாத்தியிருந்தா என்னப்பா, உள்ளே ஹால்வழியா போயேன்!" என்று கூறிவிட்டுப் போனான் குப்பன்.

ஆறுமுகம் நிம்மதியோடு மறுபடியும் முன்வாயிலுக்கு வந்தான். அவனையுமறியாமலே காலையில் ஸ்டேஷனுக்குப் போவதற்காகஐயா வரச்சொன்னார் என்று கூறிவிட்டான். இனிமேல் அதை அவன் திரும்பத் திரும்பத்தவறாமல் கூற வேண்டும். இப்படிக் குப்பன் கேட்பானென்று தெரிந்திருந்தால் இவ்வளவு விரைவில் பங்களாவுக்கே வந்திருக்கமாட்டான். ஆனால் இனி என்ன செய்வது? ஹும்.... இதுவும் ஒருவிதத்தில் சரிதான். பிள்ளையை அவன் கடைசியாகச் சந்தித்த பொழுது அவர் உயிரோடுதானிருந்தார் என்று நிச்சயமாகக் கூற நல்ல ருஜுவாகி விட்டது!

இப்படி எண்ணிக் கொண்டே அவன் அறைக்குள் நுழைந்து உடைகளை மாற்ற ஆரம்பித்தான், ஆறுமுகம்.

இந்த நேரத்திலேகுப்பன் "ஆறுமுகம்! ஆறுமுகம்!" என்று கூப்பிட்ட வண்ணம் ஓடிவந்தான்.

அரைகுறையாகச் சட்டையை மாட்டிய வண்ணம் "என்ன வேணும்?" என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தான்.

"ஆறுமுகம்! ஐயாவை அறையிலே காணோமே! அதுக்குள்ளே எங்கே போய்விட்டார்?"

"தெரியலையே! ஏழு மணிக்கு ஸ்டேஷனுக்குப் போகணுமென்றார். எங்கேயோ தெரியவில்லையே" என்று நிதானமாகப்பதிலளித்தான் ஆறுமுகம்.

குப்பன் பேசாமல் போய்விட்டான். நிம்மதியோடு ஆறுமுகம் முன் வாயிலுக்கு வந்து தூணில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்து கொண்டான்.

கடிகாரம் ஏழு மணி அடித்தது, ஏழரையும் அடித்தது.

பங்களாவின் நிசப்தம் மாறவே இல்லை. ஆறுமுகத்திற்கு அது கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. எப்படியாவது சீக்கிரம் பிள்ளையைப் பற்றி அவனை விசாரித்து விட்டு மேற்கொண்டு வேறு பக்கத்திலே அவர்கள் கவனம் திரும்பிவிட்டால் அவனுக்குத் தொல்லைகள் தீரும். எப்படியும் இன்னும் அரை மணிக்குள் தீரும் என்று உட்கார்ந்திருந்தான்.

சிறிது நேரத்தில் மானேஜர் சாம்பசிவம் வந்தார். ஆறுமுகம் எழுந்து நின்றான்.

"என்னப்பா......" என்று கேட்டுக்கொண்டே உள்ளே போனார் மானேஜர்.

"ஐயா, ரயிலுக்கு போகணுமென்னாங்க........!" என்று ஆறுமுகம் இழுத்துக் கொண்டே அவர் மறைந்தவுடன் மறுபடியும் உட்கார்ந்து கொண்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சமையற்காரச் சாமிநாதன் மானேஜர் அறைக்குள் போனான். அவன் பின்னாடியே குப்பன் நுழைந்தான். இவர்கள் ஒவ்வொருவரும் போவதைப் பார்த்துக்கொண்டே பேசாமல் உட்கார்ந்திருந்தான் ஆறுமுகம்.

"காலையிலே காபி கொடுக்கப் போனால் ஐயாவைக் காணோமுங்க.........."

சாமிநாதன் மானேஜரிடம் கூறுவது ஆறுமுகத்தின் காதில் விழுந்தது. இதற்கு மானேஜர் என்ன பதில் கூறினார் என்று அவன் காதில் விழவில்லை.

பிறகு மூவரும் வெளியில் வந்து மாடிக்குப்போனார்கள். ஆறுமுகம் பேசாமல் எழுந்து நின்றுகொண்டான். அவர்கள் போனவுடன் மறுபடியும் உட்கார்ந்துவிட்டான்.

சுமார் அரைமணி நேரம் மேலே அவர்கள் பேசிக்கொண்டு நிற்பது தெரிந்தது.

கடைசியில் மானேஜர், பாஸ்கர், புஷ்பா மூவரும் இறங்கி வந்தார்கள். அவர்கள் பின்னால் குப்பனும் சாமிநாதனும் இறங்கி வந்தனர்.

வழக்கப்படி ஆறுமுகம் எழுந்து நின்றான்.

அவனெதிரிலே எல்லோரும் நின்று விட்டனர். ஆறுமுகத்திற்கு சோதனை காலம் ஆரம்பித்துவிட்டது! ஆறுமுகமும்தான் தயாராகி விட்டானே! ஆகவே தைரியமாக அவனே பேச ஆரம்பித்து விட்டான்.

"என்னாங்க......?"

"எப்பா, ஆறுமுகம்! இரவு எப்போ பங்களாவுக்கு ஐயாவைக் கொண்டுவந்து விட்டே?" என்றார் மானேஜர்.

"பத்தரை மணிக்குங்க......"

"ஐயா, என்ன சொன்னரு?"

"காலையிலே ஏழு மணி ரயிலுக்குப் போகணும். ஆகவே சீக்கிரமா, இருட்டோடு வந்துடுன்னு சொன்னருங்க!"

"அப்படியா! எந்த ஊருக்குன்னு சொன்னரா?"

"இல்லிங்களே......"

மானேஜர் பேசாமல் பாஸ்கரைப் பார்த்தார். பாஸ்கர் மானேஜரையும் புஷ்பாவையும் மாறி மாறிப் பார்த்தார். ஆறுமுகம் தலையைக் குனிந்தபடி நின்று கொண்டிருந்தான்.

"என்கிட்டே ஒரு பேச்சும் சொல்லவில்லையே......பம்பாய் காரியம் கூட, நேற்றே ஷேர் கொடுக்கிறேன்னு தந்திவந்துடுத்தே!" என்று முணகினர் மானேஜர்.

"அப்படிப் போகணுமென்ன தான் என்ன? நம்ப யாருக்கும் தெரியாம்லா போயிருப்பார்? அதோடு அவர் 'ட்ராவல் பேக்' எல்லாம் இங்கேயேதான் இருக்கு. அலமாரியிலேயிருந்த ஒரு சாமான் கூட எடுத்ததாகத்தெரியலையே. ஊருக்கு எங்கேயும் போயிருக்க மாட்டார். ஒரு சமயம் எங்காவது 'வாக்கிங்' போயிருப்பார்," என்றார் பாஸ்கர்.

ஆறுமுகம் ஒரு வித பிரதிபலிப்புமின்றி பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான்.

"உலவப் போனகூட, எட்டரை மணிவரை எங்கே போகப்போறரு? அதுவும் இவ்வளவு நேரமா......?" என்றார் மானேஜர்.

"எனக்கு என்னமோ பயமாயிருக்கு. இதுவரைக்கும் நாம் கேள்விப்படாதமுறையிலே அப்பாகாலங்காத்தாலே எழுந்து வெளியே போறது!'! என்று நலிந்த குரலில் கூறினள் புஷ்பா.

"சேச்சே! இதில் பயப்படுகிறதுக்கு ஒன்ணுமில்லே. அதெல்லாம் அடாதது செய்ய ஒரு பயலுக்கும் துணிச்சல் வராது! அதுவும் நம்ப பங்களாவுக்குள்ளே காலடி எடுத்து வைப்பானுங்களா?" என்றார்மானேஜர்.

"மானேஜர் சொல்றது சரிதான். இருந்தாலும் இந்தக்காலிப்பசங்களை நம்புறதுக்கில்லே. ஒரு மாசமா திமிர்லே பட்டினி கிடக்கிறனுவ. எவனே ரத்திரன்னு ஏதாவது பண்ணிட்டா.........ஹும். எதற்கும் வாங்க, போன்பண்ணி நம்ப நாராயணன் செட்டியார் வீட்டிற்கு ஒரு சமயம் போயிருக்காரா என்று கேட்கலாம்!" என்றுகூறிக் கொண்டே உள்ளே நுழைந்தார் பாஸ்கர். அவர் பின்னல் மானேஜரும் புஷ்பாவும் உள்ளே நுழைந்தனர்.

குப்பனும், சாமிநாதனும் மாத்திரம் வெளியே நின்று கொண்டனர். தன் நாடகத்தை ஒழுங்காக நடிக்கவேண்டுமே, ஆகவே அவர்களை அணுகினன் ஆறுமுகம்.

"என்ன அண்ணே! எதுக்கு இப்படி கலவரப்படுகிறங்க?" என்றான் குப்பனைப் பார்த்து.

"கலவரமா...? உனக்கு விஷயமே புரியலேயா. ஒரு மாசமா இந்த மில்லுக்கார பசங்களெல்லாம்வேலைக்கு வராமே கலாட்டா செய்கிறங்க. அதான், அன்றைக்குச்சொன்னேனே 'ஸ்ட்ரைக்' செய்றனுவென்று. அந்தப் பசங்க ஏதாவது இங்கே வந்து அடாதது பண்ணிவிட்டானுகளோ என்று சின்ன ஐயா பயப்படுகிறங்க. ஏன்னு கேட்டின்ன, வழக்கமாஎட்டு ஒன்பது வரை தூங்குற ஐயா இன்னைக்கு காணவே காணமுன்ன, பயம்வரத்தானேசெய்யும். அதுவும் சாதாரண காலமானப் பரவாயில்லே. இந்தக் காலத்திலேதான் எல்லாம் தனக்குத் தெரியுமென்று வயிற்றுக்கு போடுகிறவங்களைக் கூட வஞ்சிக்க நினைக்கிறனுகளே! அதனலே தான் சின்னஐயாவுக்குக் கொஞ்சம் மனசு சங்கடம்!!

"அப்படியா... அப்பன்ன பெரிய ஐயாவை இப்பொழுது காணேமா......"

"காணமல் என்ன? நாராயணன் செட்டியார் வீட்டுக்குத்தான்போயிருப்பார், அதைப் போன் செஞ்சு கேட்காமே, இப்படி அவதிபடுகிறங்க!"

"அதானே...இராத்திரி வந்து படுத்தவங்க, எங்கே போயிடப் போறங்க?" என்று கூறியதோடு ஆறுமுகம் நிறுத்திக்கொண்டான்.

"ஆமாமாம்...!" என்று தலையை ஆட்டிக்கொண்டே ஹாலில்போய் நின்றன் குப்பன். அவனைப் பின்பற்றி சாமிநாதனும் போனன். பின்னல் ஆறுமுகமும் போய் நின்று கொண்டான்.

"ஹலோ...! ஹலோ...!! யாரது செட்டியாருங்களா பேசறது!"

உள்ளே பாஸ்கர் போனில்பேசுவது வெளியிலே ஹாலில் காதில் விழுந்தது. எல்லோரும் உற்றுக் கேட்டனர்.

"ஆமாங்க... நான்தான் பாஸ்கர் பேசுகிறேன். அப்பா அங்கே இருக்கிறங்களா?'

"........."

"தெரியலே காலையிலேயே எங்கேயோ எழுந்துபோயிருக்கிறர் போலிருக்கு"

"........."

"சரிங்க பார்க்கலாம்... கொஞ்ச நேரம் பொறுத்துப் போன் செய்றேன்.

"........."

"சரிங்க இன்னும் ஒருமணியில் சொல்றேன்!"

டிங்—டிங் என்ற சப்தத்துடன் போனைப் பாஸ்கர் வைத்தது காதில் விழுந்தது.

"செட்டியார் வீட்டிலே இல்லையாம். அப்பாவைப் பார்த்தே இரண்டு நாளாயிடுத்து என்கிறர்! எதுக்கும் போலிசுக்குச் சொல்லிடு என்றர்!" என்று கூறிக்கொண்டே வெளியில் வந்தார் பாஸ்கர்; அவர் பின்னலேயே மற்ற இருவரும் வந்தனர்.

புஷ்பாவின் மூஞ்சி வெளுத்துவிட்டதைக் கவனித்துக் கொண்டே வராந்தாவிற்கு வந்தான் ஆறுமுகம்.

"சேச்சே! போலிசுக்கு சொல்லவேண்டிய அளவு பெரிய விஷயமாயிடுமென்று எனக்குப் படலே, என்னமோ பார்க்கலாம்!"

"அப்படி இல்லே! செட்டியார் சொல்வதிலும் அர்த்தமிருக்கிறது. இது மாதிரி விஷயத்திலெல்லாம் முன் ஜாக்கிரதையோடு போலிசுக்குச் சொல்விடறதுதான் நல்லது"

இதற்குள் புஷ்பா இடைமறித்து "போலிஸ் என்ன செய்ய முடியும்? விஷயத்தை நாலு பேருக்குத்தெரி

பிறமாதிரி பண்ணிக் கெடுத்துடுவானுங்க. கொஞ்சம்நேரம்பார்க்கலாம்! என்று கூறிக்கொண்டே உட்கார்ந்தாள்.

குப்பனும், சாமிநாதனும் தங்கள் வேலையைப் பார்க்கப்போய் விட்டனர்.

ஆறுமுகம் அடுத்தபடியாக வரப்போகும் போலிஸ் தாக்குதலை எப்படிச் சமாளிப்பது என்று எண்ணிக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டான்,

பகல் பன்னிரண்டுமணிவரை புஷ்பாவும் மானேஜரும் மேலும் கீழும் போய்க் வந்தவண்ணமிருந்தனர். பாஸ்கர் அப்படியே எதையோ யோசித்த வண்ணமிருந்தார்.

கடைசியாகச் சாமிநாதன்வந்து "சாப்பாடு தயாராகிவிட்டது" என்று கூறினான்.

"சரி, சாம்பசிவம், இனிமேல் பார்த்துப் பயனில்லை. போலிஸைக் கூப்பிட்டுச் சொல்லிவிடு" என்றார் பாஸ்கர்.

உடனே ஆறுமுகம் துள்ளி எழுந்து ஹாலின் ஓரத்தில் வந்து நின்று கொண்டான். மானேஜர் போனையெடுத்துப்பேசஆரம்பித்தார். புஷ்பா அவர் அருகில் நின்று கொண்டு ஏதோ ஆங்கிலத்தில் கூறினாள். இரண்டே நிமிஷத்தில்போன் செய்துவிட்டு மூவரும் சாப்பிட உள்ளே போனார்கள்.

ஆறுமுகம் மறுபடியும் வராந்தாவில் வந்துவிட்டான். ஷெட்டைத் திறந்து காரில் ஏறிப் படுத்தான். இப்பொழுதுதான் அவனுடைய திட்டத்தின் முக்கியமான கட்டம் ஆரம்பமாகப் போகிறது. ஒரு வார்த்தைகூடப் பிசகாமல் அவன் பேசியாக வேண்டும்! இதுவரையில் அவனுடைய நடிப்புச் சரியாகவே இருந்துவிட்டது. இனியும், இல்லை, இனிமேல்தான் அவன் சரியான நடிப்புச் செய்தாகவேண்டும்!

வெகுநேரம் இந்த எண்ணங்களிலேயே படுத்திருந்தான், ஆறுமுகம்.

"எழுந்திரு, ஆறுமுகம். சாப்பிடலாம்!" என்று குப்பன் தட்டிய பொழுதுதான் அவன் இந்த உலகத்திற்கு வந்தான். பேசாமல் எழுந்து குப்பன் பின்னாலேயே போனான். "என்னப்பா, தூக்கக் கலக்கமா?" என்றான் குப்பன்.

"உஹூம்......" என்று தலையை ஆட்டினான்.

"இல்லை. இப்பொழுது அரை மணிக்கு முன்னாலே நல்லா இருந்தே. அதுக்குள்ளே ஒரு மாதிரியாயிட்டியே என்னா?" என்றான் குப்பன்.

ஆறுமுகத்தால் அசட்டுச் சிரிப்போடு அவனைப் பார்ப்பதைத் தவிர வேறெதுவும் பதில் கூற முடியவில்லை.

பின் வராந்தாவிலே ஆறுமுகத்திற்கும், குப்பனுக்கும் சாப்பாடு போட்டான் சாமிநாதன்.

குப்பன் வழக்கப்படி ரசித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். ஆறுமுகத்தால் சாப்பிட முடியவில்லை. பேசாமல் சாப்பாட்டையெல்லாம் ஒதுக்கி வைத்துக்கொண்டே இருந்தான்.

குப்பன் மறுபடியும் விடவில்லை. "என்னப்பா, ஆறுமுகம், உடம்புக்கு?" என்றான்.

ஹிம்...ஒன்றுமில்லை. பசி எடுக்கலே......" என்று பல்லிளித்தான்.

"அப்படின்னா, கொஞ்சம் ரசம் சாப்பிடு. இந்தா, அண்ணே! ஆறுமுகத்திற்கு கொஞ்சம் ரசம்கொடு!" என்று கூறிவிட்டு எழுந்து கை அலம்பப்போய் விட்டான் குப்பன்.

ஆறுமுகம் அப்படியே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தான். சிறிது நேரத்தில் சாமிநாதன்ரசம்கொண்டு வந்துகொடுத்தான். அதை வாங்கிக் கொஞ்சம் குடித்துவிட்டுக் கை அலம்பிக்கொண்டு மறுபடியும் கார் ஷெட்டுக்கே வந்துவிட்டான், ஆறுமுகம்.

பகல் இரண்டு மணி இருக்கும். திடீரென்று பாக்யபவனத்தின் அமைதியைக் கலைத்துக்கொண்டு வந்தன, இரண்டு போலிஸ் வான்கள்.

ஆறுமுகம் எழுந்து ஷெட்டிலிருந்தபடியே அவர்களைப்பார்த்தான்.

சூட்போட்ட பெரிய மனிதர் ஒருவர் முதலில் இறங்கினார். அவர் பின்னாடியே இரண்டுபேர் இறங்கினர். மற்றொரு காரிலிருந்து யாரும் இறங்கவில்லை.

அந்தப் பெரிய மனிதர், நேராக முன் வாயிலில் ஏறினார். அதற்குள் பாஸ்கரும், மானேஜரும் அவரை வந்து சந்தித்தனர். இருவருடனும் அவர் ஏதோ பேசிக்கொண்டே உள்ளே போய்விட்டார். ஆறுமுகத்தின் கண்களிலிருந்து அவர்கள் மறைந்து விட்டனர். அவன் மறுபடியும் காருக்குள் வந்து படுத்துக் கொண்டான்.

போலீஸ் வந்து, நேரம் ஆக, ஆக ஆறுமுகத்தின் மனதும் கிலிபிடித்துக் கொண்டே இருந்தது. எவ்வளவுதான் தைரியமாக இருக்க முயன்றாலும், மனம் திக் திக் கென்று அடித்துக் கொண்டே இருந்தது. இதற்கு ஏற்றாற்போல் சிறிது நேரத்தில் குப்பன்வந்து "ஆறுமுகம்! ஆறுமுகம்! உன்னை சின்ன ஐயா கூப்பிடறாங்க!" என்றான். இந்த நேரத்தை எதிர்பார்த்தவன் தானே, ஆறுமுகம்.

"இதோ வந்துட்டேன்" என்று கூறிக்கொண்டே எழுந்தான். இதற்குள் குப்பன் அவனிடம் ஓடிவந்து இரகசியமாக, 'போலிஸ் இன்ஸ்பெக்டர் வந்திருக்காரு. ஒன்றும் பயப்படாதே! தைரியமா, கேட்கிறதுக்கு பதில் சொல்லிட்டு வந்துடு!" என்றான். ஆறுமுகம் பேசாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு தைரியமாகப் பங்களாவிற்குள் போனான்.

முன் ஹாலிலேயே போலிஸ் இன்ஸ்பெக்டர் ஆதிமூலம், மானேஜர், புஷ்பா, பாஸ்கர் நால்வரும் அமர்ந்திருந்தனர்.

ஆறுமுகம் போய் அவர்கள் எதிரில் நின்றான்.

"இவன் தான் நம்படிரைவருங்க" என்று இன்ஸ்பெக்டரைப் பார்த்துக்கூறிவிட்டு "ஏண்டா, இராத்திரி எத்தனை மணிக்குடா ஐயாவை கொண்டுவந்து விட்டே?" என்றார், பாஸ்கர்.

இதற்குள் இன்ஸ்பெக்டர் இடைமறித்து "இருங்கள் நான் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்" என்று பாஸ்கரிடம் கூறிவிட்டு ஆறுமுகத்தை உற்றுப்பார்த்தார் இன்ஸ்பெக்டர். (தொடரும்)

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.